வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 06.05.2021 வியாழக்கிழமை | இதழ் : 155 | பக்கங்கள் : 16

# நிமலராஜன் கொலை வழக்கு மன்றினால் கைவிடப்படுகிறது

## சந்தேக நபர்களுக்கு விடுதலை

யாழ்ப்பாணம், மே. 06

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை வழக்கின் சந்தேக நபர்கள் 6 பேருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது என சட்ட மா அதிபர் திணைகளம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு பரிந்துரைத்துள்ளது.

15

## கறிச்சட்டிக்குள் விழுந்தவர் பலி!

வடமராட்சி, மே 06

உணவகம் ஒன்றில் சமையல் செய்து கொண்டிருந்தவர் வலிப்பு நோய் காரணமாக கறிச் சட்டிக்குள் விழுந்து மரணமானார்.

அல்வாய் வடக்கை சேர்ந்த இராசையா தீபன்குமார் (வயது 41) என்பவரே இவ்வாறு மரணமானார்.

வடமராட்சி பருத்தித்துறை - மந்திகை - சாவகச்சேரி வீதியில் உள்ள உணவகம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் அறிய வருவதாவது

உயிரிழந்த நபர் கடந்த ஞாயிற்றுக் கிழமை சமையல் பணியில் ஈடுபட்டிருந்தார். திடீரென வலிப்பு

15



## மணற்காடு சவுக்கம் காட்டில் தீ!


யாழ்ப்பாணம், மே. 06

வடமராட்சி கிழக்கு, மணற்காடு சவுக்கம் காடு பகுதியில் திடீர் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

நூற்றுக்கு மேற்பட்ட மரங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

15

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவராக பிரதமர் மஹிந்த!



கொழும்பு, மே 06

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர் சபையின் தலைவராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவாகியுள்ளார்.

2021 - 2022 ஆம் ஆண்டுக்கான தலைவராகவே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின்

15

## கொரோனா தொற்றுக்கு கர்ப்பவதி பெண் மரணம்!

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கர்ப்பவதி பெண்ணொருவர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

ராகமை - பட்டுவத்தை பகுதியைச் சேர்ந்த 45 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

நாட்டில் கொரோனாவால் உயிரிழந்த முதலாவது கர்ப்பவதிப் பெண் இவராவார்.

இதேவேளை, நாட்டில் நேற்று 11

15

'பொன்சேகா இனத்தையும் படையினரை காட்டிக்கொடுத்துவிட்டார்'

## சரத் வீரசேகரவின் குற்றச்சாட்டையடுத்து பாராளுமன்றத்தில் வெடித்தது மோதல்!

கொழும்பு, மே 06

"சரத் பொன்சேகா எம்.பி, இனத்தையும் இராணுவத்தை மீண்டுமொரு தடவை காட்டிக் கொடுத்துவிட்டார்" என்று அமைச்சர் சரத் வீரசேகரா பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்த குற்றச்சாட்டையடுத்து இருவருக்கும் இடையில் பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் கடுமையான வாய்ச் சண்டை ஏற்பட்டது.

.மிருசுவில் படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, குற்

15

## யாழ்ப்பாணத்தில் 37 பேர் உட்பட வடக்கில் 43 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், மே. 06

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 37 பேர் உள்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 43 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று செவ்வாய்க் கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ பீடம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகிய இரண்டு ஆய்வுகூடங்களில் 824

15



## மகாவலி அதிகார சபையின் நில அபகரிப்பு தடுக்கப்படும்

தமிழ் எம்.பிக்களிடம் உறுதியளித்த சமல்

முல்லைத்தீவு, மே. 06

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபையால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட நில சுவீகரிப்பு நிறுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று உறுதியளித்தார்.

15

# 1,939 பேருக்கு கொரோனா!

## நாளாந்தம் அதிகரிக்கிறது தொற்று



கொழும்பு, மே. 06

நாட்டில் கொவிட் -19 நோய்த்தொற்றால் இன்று ஒரே நாளில் ஆயிரத்து 939 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாட்டில் ஒரே நாளில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும். நேற்று முன்தினம் ஆயிரத்து 914 பேர்

15

## தேர்தல் முறை குறித்து ஆராயும் குழுவில் சிறுபான்மையின எம்.பிக்கள் ஆறு பேர்!

கொழும்பு, மே. 06

தேர்தல் முறை குறித்து ஆராயும் குழுவில் சிறுபான்மையின எம்.பிக்கள் ஆறு பேர் இடம்பிடித்துள்ளனர்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கு சபை முதல்வரும், வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தலைமையில் விசேட பாராளுமன்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## சரத் வீரசேகர...

றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டமையால் மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்னாயக்கவுக்கு மன்னிப்பளித்தல் உள்ளிட்ட இன்னும் பல விவகாரங்கள் தொடர்பில், அமைச்சர் சரத் வீரசேகரவுக்கும், சரத் பொன்சேகாவுக்கும் இடையில் சபையில் நேற்றைய தினம் கடுமையான வாய்ச்சண்டை இடம்பெற்றது.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு முன்னதாக உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர,

“இன்றைக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர், ஊடகங்களுக்கு கருத்துரைத்திருந்த சரத் பொன்சேகா எம்.பி, இனத்தையும் இராணுவத்தை மீண்டுமொரு தடவை காட்டிக்கொடுத்துவிட்டார்” என்றார்.

மிருசுவில் படுகொலை வழக்கில் குற்றவாளியாக்கப்பட்ட சுனில் ரத்னாயக்க என்ற இராணுவ வீரருக்கு, மன்னிப்பு வழங்கியது முழுமையான தவறாகும், அதில்,குற்றஞ்சாட்டப்பட்ட சகல படைவீரர்களும் சிறையில் அடைக்கப்படவேண்டும். சிறையில் அடைக்கப்படாமை புதுமையானது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார் எனக் கூறிய சரத் வீரசேகரா, படுகொலையை யார் செய்திருந்தாலும் அதனை நாங்கள் கண்டிகின்றோம் என்றார்.

இதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா, ”யுத்தம் செய்தோம், நானும் ஒரு படைவீரர் எனக்கூறி, அணிந்திருந்த சீருடையையும் கேவலப்படுத்த வேண்டாம். யாராக இருந்தாலும் மனித படுகொலைகளைச் செய்யமுடியாது. மனித படுகொலை செய்திருந்தால், சுனில் ரத்னாயக்க மட்டுமல்ல, நீங்களும், கரணாகொடவும் யாராக இருந்தாலும், சிறைக்குச் செல்லவேண்டும், தூக்குமேடைக்கும் செல்லவேண்டும். அது இராணுவத்தை காட்டிக்கொடுக்கும் செயல் அல்ல” என்றார்.

சரத் வீரசேகர இதற்குப் பதிலளித்து கடுமையாக உரையாற்றிய போது, “ய் சொல்லி வீரராக வருவதற்கு முயற்சிக்க வேண்டாம், யுத்தக் குற்றம் செய்திருந்தால் சரி, ஆனால், செய்யாததைக் கூறுவதுதான் பிரச்சினையாகும். ஜெனிவா சூடு ஆரம்பிப்பதற்கு முன்னர், தமிழ் டயஸ் போராவுக்கு தேவையான வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தேவையான வகையில், நாங்கள் யுத்தக் குற்றம் செய்தோமெனக் கூறிக்கொண்டிருக்கும் மேற்குலக நாடுகளுக்குத் தேவையான வகையில், எவ்விதமான சாட்சிகளும் இல்லாமல், இவ்வாறு கூறுவது, டொலருக்காக மட்டுமே” என்றார்.

அதன்பின்னர், உரையாற்றிய சரத் பொன்சேகா, “யுத்தக்களத்தில் ஒன்றாக இருந்தவர்கள் நாங்கள், ஆனால் சுனில் ரத்னாயக்க மனித படுகொலைகளைச் செய்தவர், ஆனால், அவ்வாறானவர்களை நாங்கள் பாதுகாக்கமாட்டோம். மனம்பேரி படுகொலைக்கு, கிருஷந்தி குமாரசாமி படுகொலை, எம்பிலிப்பிட்டிய படுகொலை உள்ளிட்டவற்றுக்கு தண்டனையை பெற்றுக்கொடுத்தோம். இங்கிருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், தானும் யுத்தம் செய்த மனிதனாம், சிவில் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்தார், பாதுகாப்பு சபையில் கூட இருக்கவில்லை, கடற்படையிலிருந்து வெளியே போட்டனர்” எனத் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில்...

பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

43 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 37 பேருக்கும் கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் தலா மூவருக்கும் என 43 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் வர்த்தகத் தொகுதியில் வர்த்தகர்கள், பணியாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 21 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று நாள்களில் 30 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 8 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற 6 பேருக்கு தொற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

வவுனியா பூவரசங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் கண்காணிக்கப்பட்ட மூவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## மணற்காடு...

தீயை அணைக்கும் முயற்சியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் முன்னெடுத்தனர். சவுக்கம் காட்டுக்கு விசமிகள் தீ வைத் திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (3)

## நிமலராஜன்...

அதனால் 6 சந்தேக நபர்களையும் விடுவிக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு, ஒக்ரோபர் 19ஆம் திகதி இரவு 10 மணியளவில் யாழ்ப்பாண நகரின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாக அப்போது இருந்த, கச்சேரியடிப் பகுதியில் உள்ள வீட்டில் வைத்து அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அன்று மாலையில், நாகர்கோவிலில் இலங்கை விமானப்படை உலங்குவானூர்தி விடுதலைப் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட செய்தியை பிபிசி தமிழோசைக்கு தொலைபேசி மூலம் வழங்கிவிட்டு, தமிழ் நாளிதழ் ஒன்றுக்காக தொலைநகலில் அனுப்புவதற்காக அந்தச் செய்தியை எழுதிக் கொண்டிருந்தபோதே, அவரது வீட்டுக்குள் நுழைந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுப்படுகொலை செய்தனர்.

அதையடுத்து, அவரது வீட்டுக்குள் கைக்குண்டை வீசிவிட்டுச் சென்றதில், நிமலராஜனின் தந்தை, தாய், மருமகன் உள்ளிட்டோர் படுகாயமடைந்தனர்.

தமிழ், சிங்கள ஊடகங்களுக்கு செய்தியாளராளராக யாழ்ப்பாணத்தில் இருந்து பணியாற்றியிருந்தார் நிமலராஜன்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பி 423/2000 என்ற வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பில் போடப்பட்டது.

சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக கடந்த பல ஆண்டுகளாக வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தது.

இந்த நிலையில் பொலிஸ் தலைமையக சட்டப் பிரிவின் பணிப்பாளருக்கு சட்ட மா அதிபரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நிமலராஜன் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 6 பேருக்கும் எதிரான குற்றவியல் நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என பரிந்துரை வழங்கியுள்ளார்.

அத்துடன், வழக்கின் சந்தேக நபர்களை விடுவித்து 14 நாள்களுக்குள் அறிக்கையிடுமாறும் பொலிஸ் திணைக்களத்தின் சட்டப் பிரிவு பணிப்பாளருக்கு சட்ட மா அதிபர் பணித்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த நெப்போலியன் என அழைக்கப்படும் செபஸ்டியன் ரமேஸ் உள்ளிட்டவர்களே நிமலராஜன் கொலை வழக்கில் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ‘மாஸ்க்’ அணியாதோர் யாழ். நகரில் கைது!

யாழ்ப்பாணம், மே 06

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் முகக் கவசம் அணியாதோர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் யாழ். நகர பகுதியில் இடம்பெற்ற விஷேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது யாழ். நகர்ப்பகுதியில் முகக்கவசம் அணியாதோர் மற்றும் சுகாதார நடைமுறையினை பின்பற்றாதோர் 30 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

## தேர்தல் முறை...

றக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் வெளியிட்டார்.

இந்த பாராளுமன்ற விசேட குழுவின் உறுப்பினர்களாக அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பவித்ரா வன்னியாரச்சி, டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ஸ, எம்.யூ.எம். அலி சப்ரி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸநாயக்க, கபீர் ஹாசிம், ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன், மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

## மகாவலி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் கடந்த மாதம் இடம்பெற்ற சந்திப்பின் அடிப்படையில் நேற்று கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பான விசேட சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே மேற்படி விடயமும் பேசப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர்கள், செயலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு நேரில் சென்று பார்வையிட்டு கருத்தறிந்து இறுதி முடிவு எட்டப்படும் என்று தங்களால் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட நிலையில் தற்போது அந்த உத்தரவாதம் மீறப்பட்டு மகாவலி அதிகார சபை செயற்பட முனைகின்றது என தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதைச் செவிமடுத்த இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, குறித்த பகுதிக்கு எம்மால் நேரில் பயணித்து அது தொடர்பான இறுதி முடிவு எட்டப்படும் வரை மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை நிறுத்துமாறு செயலாளர் ஊடாகக் கடிதம் அனுப்பப்படும் என்று உத்தரவாதம் வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## கொரோனா...

கொரோனா உயிரிழப்புக்கள் பதிவாகின. இதனால், தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 720 ஆக அதிகரித்துள்ளது என்றும் சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## 1,939 பேருக்கு...

அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

கடந்த 9 நாள்களாக நாட்டில் ஆயிரத்து 500 பேருக்கு மேல் கொவிட்-19 நோய்த் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை ஒரு இலட்சத்து 17ஆயிரத்து 529 பேர் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 75 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று குணமடைந்துள்ளனர். 16 ஆயிரத்து 734 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். 720 பேர் உயிரிழந்துள்ளனர்.

## கறிச்சட்டிக்குள்...

வந்ததால் அவர் கொதித்துக் கொண்டிருந்த கறிச் சட்டிக்குள் மயங்கி விழுந்துள்ளார்.

சக பணியாளர்கள் அவரை உடனடியாக மீட்டு மந்திகை ஆதார வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று காலை மரணமானார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ச. சிவராசா நடத்தினார். (ஐ-2)

## ஆசிய அபிவிருத்தி...

54ஆவது ஆண்டு கூட்டத்தொடர் நேற்று மாலை மெய்நிகர் வழியில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டம் ஜோர்ஜியாவின் - திபிலிசியில் நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டது. எனினும், தொற்று அச்சுறுத்தல் காரணமாக மெய்நிகர் வழியில் இடம்பெற்றது.

இதன்போதே, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநராக பதவி வகித்து வரும் மஹிந்த ராஜபக்ஷ ஆளுநர் சபையின் தலைவராக தெரிவானார். இதன்போது, ஆஸ்திரியா, மொங்கோலியாவின் ஆளுநர்கள் உபதலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர் குழுவின் 55 -ஆவது ஆண்டு கூட்டம் அடுத்த ஆண்டு கொழும்பில் நடைபெற உள்ளது. (ஐ)

# ரிஷாத் பாராளுமன்றம் வருவாரா? 24 மணி நேரத்தில் அரசு ‘3 கதைகள்’

## உண்மை நிலை என்ன? சபாநாயகரிடம் கிரியெல்ல கேள்வி

கொழும்பு, மே 06

ரிஷாத் எம்.பி.யை பாராளுமன்றம் அழைத்து வரும் விடயத்தில் 24 மணி நேரத்தில் ‘3 கதைகள்’ கூறப்பட்டுள்ளதால் உண்மைக் கதை எதுவென சபாநாயகர் கூற வேண்டுமென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீனை பாராளுமன்றம் அழைத்து வராமை தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சையின் போதே இவ்வாறு சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறுகையில்,

குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீனை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் அழைத்து வருவதாக முதலில் கூறப்பட்டது. ஆனால், அன்று அழைத்து வரவில்லை. கேட்டபோது சபாநாயகரின் கையெழுத்துப்பெறப்படவில்லை என முதலாவது கதை கூறப்பட்டது. பின்னர் ரிஷாத்தை அழைத்து வரும் குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிக்கு கொரோனா என இரண்டாவது கதை கூறப்பட்டது. இப்போது பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதால் அழைத்துவரக்கூடாது என மூன்றாவது கதை கூறப்படுகின்றது.

இவ்வாறு ரிஷாத் எம்.பி.யை பாராளுமன்றம் அழைத்து வரும் விடயத்தில் 24 மணி நேரத்தில் ‘3 கதைகள்’ கூறப்பட்டுள்ளன. இதில் உண்மைக்கதை எதுவென்று சபாநாயகர் கூற வேண்டும். பாராளுமன்ற உறுப்பினரின் உரிமையை சபாநாயகர் பாதுகாக்க வேண்டும் என்றார். இதற்கு பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ,எனக்கு கொரோனா கதியே கூறப்பட்டது. இது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை எடுப்போம் என்றார்.

# போர் காலம்போல் தொற்று காலத்திலும் எம் மாணவர்கள் சாதிப்பது மகிழ்ச்சியே

## சுந்தர்பவனுக்கு மாவை பாராட்டு

யாழ்ப்பாணம், மே 06

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற சரசாலையைச் சேர்ந்த மாணவன் தனராஜ் சுந்தர்பவன் தேசியமட்டத்தில் முதலிடத்தில் பௌதிக அறிவியல் பிரிவில் 2.942 ‘சற்’ புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளமை பெரு மகிழ்ச்சியளிக்கின்றது.

சுந்தர்பவன் ஒலிம்பியாட் போட்டியிலும் புலமைப்பரிசில் பெற்றவர் என்பதும் பெருமையேதான்.

வரலாற்றில் இலங்கைத் தமிழ் மக்கள் கல்வித் துறையிலும், விளையாட்டுத் துறையிலும், தொழில் துறையிலும், அரச நிர்வாகத் துறையிலும் வேற்றுக் கிரகங்கள் பற்றிய அமெரிக்க நாஸா ஆய்வு செய்யும் துறைகளிலும் ஏனைய பல துறைகளிலும் சாதனை படைத்தவர்களின் வரலாறுகளுண்டு.

அதேபோல பல்கலைக் கல்வியில் கல்விபெற வெற்றி பெற்ற ஏனைய தமிழ் மாணவர்களையும் பாராட்டி நிற்கிறோம்.

இன விடுதலைக்கான போர்க் காலத்திலும் தமிழ்ப் பிரதேசங்களில் கல்வியில் எம் மாணவர்கள் பல வகையிலும் வெற்றிகள் பெற்றுள்ளனர். 2020 சென்ற ஆண்டு முதல் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று காலத்திலுங் கூட எம் மாணவர்கள் கல்வியில் தேர்வுகளில் சாதனை படைத்தமை வரலாற்றில் பதியப்பட வேண்டியதாகும்.

மாணவன் தனராஜ் சுந்தர்பவன் அவர் பெற்றோருக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் மட்டுமல்லாமல் தமிழினத்திற்கும் புலமைகொண்டவர்கள் மத்தியிலும் சுந்தர்பவன் பெற்ற சாதனையையிட்டு அனைவரும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

எதிர்காலத்திலும் சுந்தர்பவன் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டுமெனவும் வாழ்த்தி நிற்கின்றோம்.

# நடேஸ்வர கல்லூரி மாணவர்கள் உயர்தர பரீட்சையில் 100வீத சித்தி!

யாழ்ப்பாணம், மே 06

காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரியில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு கலைப்பிரிவில் தோற்றிய அனைவரும் (100வீத) சித்தியடைந்துள்ளனர்.

போர் அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து சுன்னாகம், தெல்லிப்பழையில் இயங்கிய காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி 28 வருடங்களின் பின்னர் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

இந்நிலையில், கடந்த வருடம் நடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் தோற்றிய ஞானசேகரம் சத்தியா 2ஏ, பி, இன்பராசா மதீசா ஏ,பி,சி, செல்வராசா தக்சிகா ஏ,பி,சி, கனகலிங்கம் டினோஜன் 2பி, சி, சிவகுமார சஜிந்தன் பி, சி,எஸ், செல்வம் நிரோஜினி 3சி, சசிகுமார் சசிபிரியன் சி, 2எஸ். (ஐ)

# திருமலை பிரதேச செயலருக்கு கொரோனா தொற்று உறுதி!

திருகோணமலை பிரதேச செயலர் மற்றும் மாவட்ட செயலக அதிகாரி ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்ட செயலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை பிரதேச செயலாளருக்கும், மாவட்ட செயலகத்தின் நிர்வாக அதிகாரி ஒருவருக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட் டுள்ளது. (ஐ)

# கலாசாலை இறுதி பரீட்சை பிற்போடப்பட்டது!

யாழ்ப்பாணம், மே 06

நாட்டில் உள்ள எட்டு ஆசிரியர் கலாசாலைகளில் நடைபெறவிருந்த இறுதிப் பரீட்சை திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி இப்பரீட்சை ஆரம்பமாக இருந்தது. இந்நிலையில் பல்வேறு இடங்களில் இருந்து பரீட்சார்த்திகள் தாம் கற்ற ஆசிரியர் கலாசாலைகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஆயத்தமாக சென்று கலாசாலை விடுதிகளிலும் அயல் சூழலில் இருந்த வீடுகளிலும் தங்கியிருந்தனர்.

இந்நிலையிலேயே சுகாதாரப் பகுதி வழங்கிய அறிவுறுத்தலை அடுத்து பரீட்சை திணைக்களம் பரீட்சை பிற் போட்டுள்ளதாக அறிவித்துள்ளது. (ஐ)

# பாக்கு நீரிணை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்பத்து காடழிப்பு தொடர்பாக, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன்மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், இருதினங்களுக்கு முன்னர் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிக்க முற்பட்ட பதினொரு இந்திய மீன்பிடிப்படகுகளையும் அவற்றிலிருந்த 88 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் வடக்கே கைப்பற்றி, மீளவும் இந்திய படகுகளையும் அவற்றிலிருந்த மீனவர்களையும் இந்திய கடற்பரப்புக்குள் விரட்டிவிட்டுள்ளனர்.

கொரோனா நோய்த் தாக்கம் இந்தியாவில் காணப்படுவதுபோன்று இலங்கையில் மிக மோசமானதாக இல்லை. ஆயினும், பாக்கு நீரிணை வாயிலாக இலங்கை கொரோனா வியாதியை உள்வாங்கக்கூடிய சூழ்நிலைகள் பலமாக இருப்பதையும், இதுகுறித்து இலங்கைக் கடற்படையினர் கடலில் கொரோனாவுக்கு எதிரான ஒரு புதிய யுத்தத்தை முடுக்கிவிட்டுள்ளதையும் அவதானிக்கமுடிகின்றது.

# இப்படியும் நடக்கிறது...!

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மனை சோதிடர் இந்த நம்பிக்கை மேல் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். ஒருநாள் இப்படித்தான் ‘அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காகங்களை ஒன்றாகப் பார்த்தால் அந்த நாள் சிறக்கும்’ என்று நம்பிக்கை ஊட்டினார்.

மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காகங்கள் ஒன்றாக தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான்.

அதன்பின் தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் வீதியில் அலையத் தொடங்கி விடுவான். ஒருநாள் அரண்மனக்குப் பக்கத்து வீதியில் இரண்டு காகங்கள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான். ‘அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார்’ என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடி வந்து மன்னரிடம் விபரம் சொன்னான்.

இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காகம் பறந்து போய் விட்டது. மன்னனுக்கு பயங்கர கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து ‘இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு’ என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிகமானது. ‘நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி’ என்று கட்டளை இட்டான்.

சேவகன் சொன்னான். ‘மன்னா, இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காகங்களைப் பார்த்தேன். கை மேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா?’ என்றான்.

அண்மைக்காலமாக இந்த முகநூல்பக்கம் போவதையே தவிர்த்து விட்டேன்.

இந்த மன்னனைப் போன்ற சில ‘மன்னர்’களின் கருத்துக்களைப் படிக்கின்றபோது எதையாவது எழுத வேண்டும் என்று மனது உறுத்தும், பிறகு எழுதிவிட்டு சில நல்ல நண்பர்களோடும் முரண்படவேண்டி வந்துவிடுகின்றது. இதனால், அந்தப் பக்கம் தலைவைத்தும் படுப்பதில்லை என்ற பிடிவாதத்துடன் இருக்கின்றேன்.

இந்தவேளையில் தொலைபேசிக்கு ஒரு குறுந்தகவல். நண்பர் ஒருவர் அனுப்பிய அந்த குறுந்தகவலைத் திறந்தால் அது நேரே முகநூலுக்குக் கொண்டுபோய் விட்டது.

என்னதான் அப்படி இருக்கிறது என்று பார்த்தால், ஒருவரின் முகநூல் பதிவு. கவிஞர் மு.மேத்தாவின் புதுக்கவிதை போல இருந்தது.

வாகனம் கவிழ்ந்து விபத்தானதில் சுமந்திரன் ஆபத்தின்றி தப்பியதற்கு ஆண்டவருக்கு நன்றி.

அப்படியே ... மூன்று முறை கவிழ்ந்த வாகனத்திலிருந்து சட்டை கசங்காமல் தப்பிய சுமந்திரனின் சாணக்கியம் என்று வரப்போகின்ற ‘பில்டப்’களிலிருந்து சுமந்திரனையும் எங்களையும் ஒரு சேரக் காப்பாற்ற வேண்டுகிறோம் ஆண்டவரே!

இதுதான் அந்த நண்பர் அனுப்பிவைத்த முகநூல் பதிவு. அப்படியொரு ‘பில்டப்’ எங்கிருந்தும் வந்ததாகத் தெரியிவில்லை. ஆனால், இந்த குறுந்தகவல் வந்த சில மணி நேரங்களில் சுமந்திரனே அந்த விபத்து தொடர்பாக தனது சந்தேகங்களை தெரிவித்திருக்கிறார்.

அதுபற்றி எழுதலாம் என்று நினைத்துக்கொண்டிருந்த போது, மூத்த ஊடகர் எஸ். திருச்செல்வத்திடமிருந்து ஒரு மின்னஞ்சல். எதிர்பாராத இன்ப அதிர்ச்சி. அதுவும் அவர் சின்னவயதில் பறிகொடுத்த அவரது அன்புமகன் அகிலனின் பிறந்தநாளான இன்று (நேற்று 05.05). ஈழநாடு பற்றிய அவரின் குறிப்பும் கூடவே, இந்த ஊர்க்குருவியின் பத்தி பற்றிய கருத்தும் கவனத்திற்குரியவை ஆகின.

உங்கள் பத்தியை ரசித்துப் படிப்பேன். சுமந்திரன் உங்கள் பத்திரிகைக்கு கருப்பொருளாகி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதுதான் நண்பர் திருவின் வாக்கியங்களில் சில...

அவர் இப்படிச் சொன்ன பிறகும் இன்றே சுமந்திரனைப் பேசுபொருளாக்க விரும்பவில்லை. ஆனால், அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து வழங்கப்பட்ட அதிரடிப் படை பாதுகாப்பு விலக்கப்பட்ட பின்னரும் தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அவரே தெரிவித்திருந்த நிலையில் இவ்வாறு விபத்து நடைபெற்றிருப்பதும், அதில் அவர் சந்தேகம் தெரிவித்திருப்பதும் கவனிக்க வேண்டியது. விபத்து நடந்ததும் நிச்சயம் பொலிஸார் வரவழைக்கப்பட்டிருப்பார்கள். விபத்து நடந்த இடத்தில் வாகனம் வழுக்கும் வகையில் ஏதாவது ஊற்றப்பட்டிருந்ததா என்ற சந்தேகத்தை சுமந்திரன் எழுப்பியிருக்கிறார். சம்பவம் நடைபெற்ற உடனேயே அந்த இடத்தில் வைத்து எழுப்ப வேண்டிய சந்தேகத்தை ஒரு சட்டத்தரணியான சுமந்திரன் மட்டக்களப்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பியது ஏன் என்று தெரியவில்லை. எதுவோ, அவரது பாதுகாப்பு முக்கியமானது.

- ஊர்க்குருவி.

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
06.05.2021 வியாழக்கிழமை
சார்வரி, சித்திரை 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பு கோரும் தமிழ் - முஸ்லிம் உறவின் எதிர்காலம்?

சில தினங்களுக்கு முன்னர் தமிழ் அரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர், எம். ஏ. சுமந்திரன், கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம்களுடன் இணைந்து செயல்படுவது தொடர்பில் பேசிவருவதாக தெரிவித்திருந்தார். சுமந்திரன் அவ்வாறு கூறிய மறுதினமே, ரெலோ சார்பிலான, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அவ்வாறான பேச்சு எதிலும் ஈடுபடவில்லையென்று குறிப்பிட்டிருந்தார். இந்த விடயத்தில் கூட ஒற்றுமையை பேணிக்கொள்ள முடியாத கூட்டமைப்பினரால், எவ்வாறு முஸ்லிம் சமூகத்துடன் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்?

இது ஒரு விடயம் என்றால், தமிழ் - முஸ்லிம் உறவு தொடர்பில் கூட்டமைப்பினர் இதுவரையில் கூறிவந்த விடயங்களே தற்போது பொய்த்துப்போயிருக்கின்றன. தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தமிழ் - முஸ்லிம் உறவின் கதாநாயகனாக நோக்கப்பட்ட ஒருவர். 'பொத்துவில் தொடங்கி பொலிகண்டிவரை' - பேரணியில் முஸ்லிம்கள் பங்குகொண்டமைக்கு சாணக்கியனே பிரதான காரணமெனவும் கூறப்பட்டது. ஆனால், முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கினை தமிழ் - முஸ்லிம் உறவை சிதைப்பவரென்றும், தமிழ் மக்களின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவரென்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். பிள்ளையானுடனும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனுமிணைந்து, சாணக்கின் தமிழர்களின் போராட்டத்தை காட்டிக் கொடுத்தாரென, ஹரிஸ் கடும்தொனியில் சாணக்கியனை தாக்கியிருக்கின்றார்.

இதன்மூலம், தமிழ் - முஸ்லிம் உறவை கட்டியெழுப்புவதற்காக சாணக்கியன் பாடுபடுகின்றார் என்னும் விம்பம் தகர்ந்திருக்கின்றது. அதேவேளை, கிழக்கு மாகாண சபை தேர்தலில் இணைவதற்கு முன்னர், கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு விவகாரத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் சுமூகமாக பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள முடியுமா என்பது பற்றியே இப்போது சுமந்திரன் சிந்திக்க வேண்டும்.

20ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில், பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்தமை தொடர்பில் சாணக்கியன் தெரிவித்த கருத்துக்களுக்கு எதிர்வினையாற்றும் வகையிலேயே, ஹரிஸ் மேற்கண்டவாறு குற்றம்சாட்டியிருக்கின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முஸ்லிம் சமூகம் தொடர்பில் ஒரு தெளிவான நிலைப்பாடில்லை. குறித்த சூழலில் எதனைக் கூறினால், அது ஊடங்களில் பேசுபொருளாகுமென கணக்குப்போட்டே விடயங்கள் பேசப்படுகின்றன. இதன் விளைவாகவே இவ்வாறான தேவையற்ற விவாதங்கள் தோன்றுகின்றன.

20ஆவது திருத்தச்சட்டத்தை பொறுத்தவரையில், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஆதரவளிக்காமல், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதவளித்தமையானது, முஸ்லிம் காங்கிரஸின் கட்சிக் கட்டுப்பாட்டை தெளிவாக வெளிக்காட்டியிருக்கின்றது. அதனை ஹறிஸ் ஓர் அரசியல் வியூகமென வர்ணித்திருக்கின்றார். அவ்வாறு தாம் செய்தமையால்தான், உங்களிடமிருந்து (தமிழர்களிடமிருந்து) எங்களின் (முஸ்லிம்களின்) ஆள்புல எல்லைகளை பாதுகாத்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் ஹறிஸ் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அவ்வாறாயின், கல்முனை விவகாரம் தொடர்பில் அவர்கள் அரசாங்கத்துடன் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக்கொண்டுதான், 20ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவளித்தனரா?

எந்த சாணக்கியனால் தமிழ் - முஸ்லிம் உறவு மலர்ந்ததாக வாதிடப்பட்டதோ, இன்று அவரின் பெயராலேயே மீளவும் தமிழ் - முஸ்லிம் உறவு அரசியல் ரீதியில் மலினப்படுத்தப்பட்டிருக்கின்றது.

# பாக்கு நீரிணை!

- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கையின் வடக்கு - கிழக்கு ஆயுத போராட்டத்தைப் பொறுத்தவரை பாக்கு நீரிணை மிகவும் குறிப்பிடத்தக்கதாகவே இருக்கின்றது. எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வரும்வரை, பாக்கு நீரிணை வடக்கு-கிழக்கு மக்களைப் பொறுத்தவரை உயிரோட்டமானதாகவே காணப்பட்டிருந்தது.

இலங்கையின் மன்னார் வளை குடாவின் தலைமன்னார் பகுதிக்கும் இந்தியாவின் இராமேஸ்வரத்துக்குமிடையே உள்ள தூரம் 24 மைல்களாகும். இன்று, தமிழகத்தில் 90 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் குறிப்பாக, இராமேஸ்வரம் மண்டபம் அகதிகள் முகாம் உட்பட ஏனைய இடங்களில் காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு-கிழக்கு யுத்தம் ஆரம்பித்த எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து யுத்தக் கெடுபிடிகளின் தாக்கம் காரணமாக தமிழகத்தை பாக்கு நீரிணை வழியாக சென்றடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**கடல் பயணம்**

பாக்கு நீரிணை கடல் பயணம் என்பது அபாயகரமானதாகும். வடக்கு-கிழக்கின் தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக பாக்கு நீரிணையைத் தாண்டிச் சென்றபோது படகுகள் கவிழ்ந்தும் கணிசமானளவு தொகையினர் கடலில் பலியான சம்பவங்களும் இடம் பெற்றிருந்தன. மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாகூட, ஆரம்பத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) இராணுவப்பிரிவுக்கு தலைவராக இருந்த காலத்தில் இராமேஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பாக்கு நீரிணை வாயிலாக வந்தபோது அவரது இயந்திரப்படகு ஒரு தடவை கவிழ்ந்ததில், அவரோடு பயணித்த வேறுசில ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் கட லில் மூழ்கி உயிரிழந்தனர். இருந்தபோதிலும் டக்ளஸ் தேவானந்தா, அன்று பாக்கு நீரிணையை துணிச்சலோடு நீந்திக்கடந்து, யாழ் குடாநாட்டில் பாதுகாப்பாக கரை சேர்ந்திருந்தார்.

இதுதவிர, அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமல்ல. ஏனைய தமிழ் ஆயுத போராட்ட இயக்கங்களும் வடக்கில் தாக்குதல்களை நடத்திவிட்டு, பாக்கு நீரிணை வழியாகவே இந்தியாவை சென்றடைந்து தப்பித்துக்கொண்டன. இருந்தபோதிலும், வடக்கு-கிழக்கு யுத்தம் சூடுபிடித்திருந்த வேளையில் பாக்கு நீரிணை இந்திய கடலோர பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பில் மட்டுமல்ல, இலங்கை கடற்படையினரின் பலத்த ரோந்து நடவடிக்கைக்கு உட்பட்டிருந்ததென்பதுவும் குறிப்பிடத்தக்கது.

**தென்னிந்திய மீனவர்கள்**

ஆனால், தற்போது வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவடந்து 12வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், கடந்த சில தினங்களாக பாக்கு நீரிணை தென்னிந்திய மீனவர்களின் ஊடுருவல்களுக்கு உள்ளாகியுள்ளது. சர்வதேச கடல் எல்லையைத்தாண்டி இலங்கையின் வடக்கு கடற் பரப்புக்குள் இந்திய மீன்பிடிப் படகுகள் அடிக்கடி ஊடுருவிவருகின்றன. இதன்காரணமாக மூன்று தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதியில் கடலுக்குச் செல்லமுடியாமல் இருந்த வடபகுதி மீனவர்கள், தற்போது தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இலங்கை -இந்திய மீனவர்களின் முக்கிய கடல் தீவாக விளங்குகின்ற கச்சதீவு, சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகவிருந்த காலத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தது.

பாக்குநீரிணையிலுள்ள கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம், இந்திய-இலங்கை மீனவர்களுக்கு முக்கியத்துவமிக்கதாக இருக்கின்றது. இருந்தபோதிலும், இந்திய மீன்பிடிப்படகுகள் இந்தியாவையும் - இலங்கையையும் பிரிக்கின்ற சர்வதேச கடலெல்லையைத் தாண்டி, இலங்கையுன் முல்லைத்தீவு கடற்பகுதிகளில் மீன்பிடிக்க வருவதை அவதானிக்கமுடிகிறது. கடந்த சிலவருடங்களில் இந்தியமீனவர்கள் கைதுசெய்யப்பட்டும் அவர்களின் படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுமிருந்தன.

இருந்தபோதிலும், இலங்கைக் கடற்படையினர் தற்போது பாக்கு நீரிணையில் தமது ரோந்து நடவடிக்கைகளை 24 மணிநேரமும் இரட்டிப்பாக்கியுள்ளதை அறியமுடிகின்றது. இந்தியாவின் கொரோனா நோயின் தாக்கம் விரிவடைந்து வருவதையடுத்து, தமிழகத்திலும் அதன்தாக்கம் குறிப்பிடத்தக்கதளவு இருப்பதையே காணமுடிகிறது. எனவே, தமிழக மீனவர்கள் வாயிலாக இலங்கை மீனவர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாகி, பின்னர் அக்கொடியவியாதி இலங்கையிலும் பரவக்கூடிய அறிகுறிகள் பலமாகஇருக்கின்றன. இதன்காரணமாகவே, தற்போது இலங்கைக் கடற்படையினர் வடக்கே பாக்குநீரிணைப் பகுதியில் தமது ரோந்துநடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

**கேரள கஞ்சா கடத்தல்**

பாக்கு நீரிணையூடாக மீன்பிடி மாத்திரமல்ல. கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கைகளும் தமிழகத்திலிருந்து இடம்பெற்றுவருவதை அவதானிக்கமுடி கிறது. அண்மைக் காலங்களில்கூட அடிக்கடி கேரள கஞ்சா கடத்தல் நடவடிக்கைகள் பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையினரால் முறியடிக்கப்பட்டிருந்தன.

**வில்பத்து கரையோரம்**

மன்னார் வளைகுடாவிற்கு கீழே கரையோரத்தையண்டியதாக காணப்படும் வில்பத்து வனப் பிரதேசமும் விரிவான காடழிப்புக்குள்ளாகியிருந்தது. இந்த வனப் பிரதேசம் பாக்கு நீரிணையை அண்மித்த வடமேற்கு கரையோரத்தில் காணப்படுவதால் கடத்தல்காரர்களின் சொர்க்கபூமியாக இது மாற்றமடையும் சூழ்நிலைகளும் பலமடைந்திருந்தன. (02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மே - 6 வியாழக்கிழமை**
**பிலவ வருடம் - சித்திரை - 23**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 1.30 - 3.00**
**திதி : தசமி**




**மேடம்**
புதிய கலை ஒன்றைக் கற்க ஆரம்பிப்பீர்கள். நிம்மதியான நாள். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். மகிழ்ச்சியூட்டும் சூழல் வரும். பணியிடத்தில் முன்பைவிட உயர்வு நிலை உண்டாகும்.

**இடபம்**
இன்று பணியிடத்தில் மேலதிகாரியால் கவனிக்கப்படுவீர்கள். முயற்சியில் இருந்த தடைகள் நீங்கும். குழந்தைகள் மகிழ்விப்பர். இளைஞர்களுக்கு காதல் விவகாரங்களில் ஈடுபாடு வரும்.

**மிதுனம்**
யாருக்கும் எந்த வாக்குறுதியும் கொடுக்காமல் இருப்பது நல்லது. தந்தையின் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். குடும்பத்தில் உறவினரால் வாக்குவாதம் வர வாய்ப்புள்ளது.

**கடகம்**
அடுத்தவருக்கு செய்யும் உதவி பிரச்னையில் முடியக் கூடும். உங்களின் பெயரை நிலைநிறுத்திக் கொள்ள போராட வேண்டியிருக்கும். வரவுக்கு ஏற்ற செலவு செய்வீர்கள். பணியில் பொறுப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்**
எதிர்பார்த்ததை விட அதிக நன்மைகள் இருக்கும். பாராட்டு உண்டு. முக்கியமான பெரிய முடிவுகள் எடுப்பதில் தாமதிக்க வேண்டாம். நன்றியுணர்வு தேவை. நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கன்னி**
புதிய வண்டி, வாகன சேர்க்கையில் தாமதம் ஏற்படும். பல பிரச்னைகளை சந்தித்து கொண்டிருந்த உங்களுக்கு நிம்மதி ஏற்படும். பணியில் இருந்த சிரமங்கள் மாறி திருப்திகரமான சூழல் ஏற்படும்.

**துலாம்**
பிள்ளைகளின் பரிபூர்ண ஒத்துழைப்பால் நிம்மதி கிடைக்கும். பணம் சேமிக்க ஆரம்பிப்பீர்கள். கருணையான எண்ணம் வரும். உங்கள் நீண்ட நாளைய தேவைகள் இன்று பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
சுபச்செலவும், வீண் செலவும் இருக்கும். மன அமைதி மீளும். குடும்ப சுமை அதிகரிக்கும். பரபரப்பான நாள். கோபத்தை குறைக்கவும். எதிர்பாராத பெரிய இடத்திலிருந்து நற்செய்தி வந்து வியப்பளிக்கும்.

**தனுசு**
பணிகளை விரைவாக முடித்துப் பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இழந்ததை திரும்ப பெற முயல்வீர்கள். யாரிடமும் அநாவசியமான பேச்சுக்களை பேச வேண்டாம்.

**மகரம்**
பணியில் முன்பைவிட ஈடுபாடு அதிகரிக்கும். மனம் நிறையும். மனதில் உள்ள குழப்ப நிலை நீங்கித் தெளிவு உண்டாகும். நீங்கள் பெறவேண்டிய நன்மை உறுதியாகக் கிடைக்கும்.

**கும்பம்**
குடும்ப பிரச்னைகளுக்கு இன்று முற்றுப்புள்ளி வைப்பீர்கள். பணியில் உள்ள நுணுக்கத்தை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். பொருளாதார சிக்கல்களும் மனசங்கடங்களும் இன்று விலகும்.

**மீனம்**
உடல் ஆரோக்கியம் சீரடையும். தாயின் ஆதரவு கிடைக்கும். பெற்றோரின் உடல் நலத்தில் சற்று கூடுதல் கவனம் தேவை. பேசும்போது படபடப்பைக் குறைத்துக் கொள்ளவும். இலாபமான நாள்.

# ஆட்சி அமைக்க ஆளுநரிடம் உரிமை கோரினார் ஸ்டாலின்!



சென்னை, மே. 06

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி ஆட்சிமைக்கவுள்ளது.

இந்நிலையில், நேற்று தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை ஆளுநர் மாளிகையில் சந்தித்து ஆட்சி அமைப்பதற்காக உரிமை கோரியுள்ளதாக மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 159 இடங்களில் வெற்றி பெற்றதுடன் அதில் தி.மு.க. மட்டும் 125 இடங்களில் வென்று தனிப்பெரும்பான்மை பெற்றது.

இதையடுத்து, மு.க.ஸ்டாலின் நாளை தமிழக முதல்வராகப் பதவியேற்கவுள்ளதுடன் அவரது கூட்டணி தமிழகத்தில் ஆட்சியமைக்கவுள்ளது.

இந்நிலையில், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்பதற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஒருமனதாக சம்மதிக்கப்பட்டது. இந்நிலையில், தமிழக ஆளுநரிடம் ஆட்சி அமைப்பதற்காக உரிமையை ஸ்டாலின் கோரியுள்ளார்.

# எதிர்கட்சி தலைவர் யார்?

## எடப்பாடியோடு மோதும் ஓ.பி.எஸ்.

சென்னை, மே. 06

சட்டமன்ற தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, 'எதிர்கட்சித் தலைவர் யார்?' என்ற மோதல், அ.தி.மு.கவில் வலுத்து வருகிறது. 'முதல்வர் வேட்பாளர் சர்ச்சை முடிவுக்கு வந்தது போல இதுவும் முடிவுக்கு வரும்' என அக்கட்சித் தொண்டர்கள் நம்புகின்றனர்.

தமிழக சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி 75 இடங்களில் வென்றுள்ளது. இதில் அ.தி.மு.க மட்டும் 65 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. இதையடுத்து, 16 ஆவது சட்டசபையில் எதிர்கட்சித் தலைவர் வரிசையில் அ.தி.மு.க அமர உள்ளது.

இந்நிலையில், நாளை மாலை ராயப்பேட்டையில் உள்ள அ.இ.அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் அந்தக் கட்சியின் எம்.எல்.ஏக்களின் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் அ.தி.மு.க சின்னத்தில் போட்டியிட்டு வென்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வமும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமியும் அறிக்கை ஒன்றில் கேட்டுள்ளனர்.

அதேநேரம், கடந்த சில நாள்களாக எடப்பாடி பழனிசாமியின் சேலம் நெடுஞ்சாலை நகர் வீட்டில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், வளர்மதி உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தி வந்தனர். இதன்பிறகு பேசிய வளர்மதி, 'எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதைக் கட்சித் தலைமை கூடி முடிவு செய்யும்' என்றார்.

இந்த சூழலில், அ.தி.மு.கவின் துணை ஒருங்கிணைப்பாளரான கே.பி.முனுசாமி தேனியில் ஓ.பன்னீர்செல்வத்துடன் ஆலோசனை நடத்தினார். இதனால் அ.தி.மு.க முகாமில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

'கட்சியின் ஒருங்கிணைப்பாளராக இருப்பதால் எதிர்கட்சித் தலைவராக ஓ.பன்னீர்செல்வம் முன்னிறுத்தப்பட வேண்டும்' என அவரது ஆதரவாளர்கள் பேசி வருகின்றனர். இதற்கு எடப்பாடி பழனிசாமி தரப்பினர் சம்மதம் தெரிவிக்கவில்லை எனக்கூறப்படுகிறது.

'கொங்கு மண்டலத்துக்கு அதிக எம்.எல்.ஏக்கள் கிடைத்திருப்பதால் எடப்பாடியின் கை கட்சிக்குள் ஓங்கியிருக்கிறது. அப்படியிருக்கையில், எடப்பாடி சொல்வதைத்தான் கொங்கு எம்.எல்.ஏக்கள் கேட்பார்கள். முதல்வர் வேட்பாளராக தன்னுடைய தலைமையை எடப்பாடி நிரூபித்துவிட்டார். எதிர்கட்சித் தலைவர் வரிசையில் அவர் அமர்வதுதான் சரியாக இருக்கும்' என சேலம் மாவட்ட அ.தி.மு.கவினர் பேசி வருகின்றனர்.

# லண்டனிலிருந்து தமிழகத்துக்கு ஒட்சிசன் சிலிண்டர்கள் வந்தன

## சிறப்பு விமானம் மூலம் அனுப்பிவைப்பு

சென்னை, மே. 06

லண்டனில் இருந்து இந்திய விமானப்படை சிறப்பு விமானம் மூலம் 46.6 லீற்றர் திறன் கொண்ட 450 ஒட்சிசன் சிலிண்டர்கள் நேற்று அதிகாலை தமிழகம் வந்தன.

இந்தியாவில் கொரோனா வைரசின் இரண்டாம் அலை தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கொரோனாவால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் இறப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான படுக்கைகள் மற்றும் ஒட்சிசன் விநியோகத்தின் மீது மிகக் கடுமையான அழுத்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவில் ஏற்பட்டுள்ள இரண்டாவது அலை கொரோனா தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் உதவிட பல்வேறு நாடுகள் முன் வந்துள்ளன.

அந்த வகையில், லண்டனில் இருந்து இந்திய விமானப்படை சிறப்பு விமானம் மூலம் 46.6 லீற்றர் திறன் கொண்ட 450 ஒட்சிசன் சிலிண்டர்கள் நேற்று அதிகாலை தமிழகம் வந்தன.

முன்னதாக குவைத்திலிருந்து 282 சிலிண்டர்கள், 60 ஒட்சிசன் செறிவூட்டிகள், வெண்டிலேட்டர்கள் மற்றும் பிற மருத்துவப் பொருட்களைக் கொண்டு வந்த விமானம் ஒன்றும் நேற்று காலை இந்தியா வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# கொரோனா நோயாளிகளுக்கு அம்புலன்ஸிலேயே சிகிச்சை

## சேலத்தில் புதிய நெருக்கடி

சென்னை, மே. 06

தமிழகத்தில் கொரானா பரவலை தடுக்க அரசு பல்வேறு கட்டுப்பாடுகள் விதித்தாலும், சேலம் அரசு மோகன் குமா ரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு தினந்தோறும் வரும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்த பாடில்லை.

தினமும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து செல்கின்றனர். 500இற்கும் மேற்பட்டோர் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது சேலம் அரசு மருத்துவமனைக்கு கொரோனா கிச்சைக்காக நூற்றுக்கணக்கானோர் அடுத்தடுத்து ஒரே சமயத்தில் அம்புலன்ஸில் வந்ததால் மருத்துவர்கள் செய்வதறியாது திகைத்து போய் உள்ளனர்.

சேலம் அரசு மருத்துமனையை பொறுத்தவரை, 650 படுக்கைகள் ஒட்சிசன் வசதியுடன் உள்ளன. தற்போது அனைத்து படுக்கைகளும் நிரம்பி விட்டதால் புதிதாக வரும் நோயாளிகளுக்கு அங்கு இடம் கொடுக்க முடியாத சூழ் நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்கள் அனைவருமே ஒட்சிசன் தேவைப்படுபவர்கள் என்பது தான் இதில் வருத்தமளிக்கும் செய்தி.

ஏற்கெனவே சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளால் படுக்கைகள் நிரம்பி விட்டதால் புதிதாக சிகிச்சைக்கு வந்தவர்களை மருத்துவமனைக்குள் அனுமதிக்க இயலாமல் அம்புலன்ஸ் வாகனத்திலேயே வைத்து சிகிச்சை அளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மாற்று நடவடிக்கைகளில் அதி காரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மேலும் சிகிச்சைக்கு வந்தவர்களில் சிலர் இறக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. நிலைமையை சமாளிக்க அரசு மருத்துவமனை முழுவதும் கொரோனா சிகிச்சை மையங்களாக மாற்றினால் மட்டுமே நிலைமையை சமாளிக்க முடியும் என அங்கிருந்த பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# தம்பதியர் உட்பட ஒரே வீட்டில் 3 பேர் கொரோனாவால் மரணம்

கொழும்பு, மே. 06

கொரோனா தொற்றினால் ஒரே வீட்டில் வசிக்கும் 3 பேர் உயிரிழந்தனர்.

மாலபே, கோணவத்தை பகுதியில் வசித்து வந்த இவர்கள் தொற்று உறுதியான பின்னர், ஐ.டி.எச் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்தனர்.

94, 86 வயது தம்பதியரும், அவர்களில் வீட்டில் வசித்து வந்த உறவினரான 82 வயதான பெண்ணும் உயிரிழந்தார்.

கடுவெல நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரும், அவரது மனைவியான ஓய்வு பெற்ற தாதியுமே உயிரிழந்தார். தம்பதியரின் மகளின் கணவரின் தாயாரே உயிரிழந்த மற்றைய பெண்மணி.

உயிரிழந்த தம்பதியினரின் மகள், கணவர், பிள்ளைகள் கொரோனா தொற்றுக்குள்ளாகி முல்லேரியா ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பலியான 3 பேரும் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி ஐ.டி.எச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் மூவரும் 3ஆம் திகதி உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் ஒரே நேரத்தில் முல்லேரியாவில் தகனம் செய்யப்பட்டன.

(அ)

# கோவிட் தடுப்பு விடயத்தில் கோட்டாபய அரசு தோல்வி!

## சபையில் சுமந்திரன் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 06

**கோவிட் தடுப்பு விடயத்தில் அரசாங்கம் பல இடங்களில் தோல்வி அடைந்திருப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.**

**கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நேற்று பாராளுமன்றில் நடைபெற்ற கோவிட் பரவல் தொடர்பான ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தின்போது இந்த விடயத்தை குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட் பரவல் போன்ற சூழ்நிலைகளை கையாளுவதற்கான உரிய சட்டங்கள் இலங்கையில் இல்லை.

இது தொடர்பாக இருக்கின்ற சட்டத்திட்டங்கள் 100 முதல் 150 வருடங்கள் பழமையானவையாகவும், தற்போதைய சூழ்நிலைகளுக்கு பொருந்தாத எனவாகவும் இருக்கின்றன.

கோவிட் பெருந்தொற்று ஏற்பட்டு முதல் 5 மாதங்களில் அவ்வாறான சட்டத்திட்டங்கள் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டாலும், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அவ்வாறான சட்டங்கள் எதனையும் உருவாக்காமல் இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பல்வேறு வெளிநாடுகள் இது தொடர்பான சட்டத்திட்டங்களை உருவாக்கியுள்ளன.

ஆனால், அரசாங்கம் இது தொடர்பாக விரைவாக செயல்படாமல், துறைமுகநகர சட்டமூலம் போன்ற வெவ்வேறு சட்டமூலங்களை கொண்டுவருவதற்கே முயற்சிகளை எடுத்து வருகின்றது - என்றார்.

(அ)

# ரிஷாத் விவகாரத்தினால் சபையில் சூடான மோதல்

கொழும்பு, மே. 06

தடுத்து வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை பாராளுமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிப்பது தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் பரபரப்பான விவாதம் நிகழ்ந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று சபாநாயகரிடம் கோரினார்.

பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, தடுத்து வைக்கப்பட்டுள்ள பதியுதீனை பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ள அனுமதிக்கவேண்டாம் என்று சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால், விசாரணைகள் முடியும் வரை பாராளுமன்றத்தில் கலந்துகொள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதியுதீனை அனுமதிக்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர்.

சரத் பொன்சேகாவுக்கும், வீரசேகரவுக்குமிடையில் சூடான வார்த்தை மோதல் வெடித்தது.

கடந்த திங்கட்கிழமை ரிஷாத்துக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோதும், இதுவரை முடிவு வழங்கப்படாமை ஏன் என கேள்வியெழுப்பினார்.

எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றியபோது, வீரசேகரவின் கோரிக்கை போன்ற ஒரு கோரிக்கையை பாராளுமன்றத்தில் முதன்முறையாக கேட்பதாக சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினரின் உரிமையை பறிக்க முடியாதென சுட்டிக்காட்டியதுடன், தமக்கு பிடிக்காத எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்து, 3 மாதங்கள் தடுத்து வைத்து அவரது பாராளுமன்ற உறுப்புரிமையை பறிக்கும் அபாயமுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை அதிகாரத்தால் விடுவிக்க முடியாது!

பிலியந்தல பொலிஸ் பகுதி தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரியுள்ளது.

புத்தளத்தில் ஊடகங்களுடன் பேசிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, பிலியந்தல பொலிஸ் பகுதி தொடர்பான சுகாதார பிரிவுகள் எடுத்த முடிவு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

தனிமைப்படுத்தும் உத்தரவுகள் தொடர்பான முடிவுகளை அரசியல் அதிகாரத்தால் மாற்ற முடியாது. சுகாதார அமைச்சர் தவிர்ந்த வேறு அமைச்சர் இதில் முடிவுகளை எடுக்க முடியாது.

முடிவுகள் தொழில்நுட்ப அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. தற்போதைய தேவை காரணமாக தனிமைப்படுத்தும் உத்தரவுகளை விதிக்க சுகாதார மருத்துவ அதிகாரியின் கோரிக்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

மார்ச் 2020 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி தற்போது தனிமைப்படுத்தப்பட்ட சட்டம் நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. முடிவுகளை எட்டுவதற்கு சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அதிகாரங்கள் உள்ளன.

பிலியந்தலை பொலிஸ் பிரிவிலுள்ள 42 கிராமசேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டு, மறுநாள் காலை அமைச்சர் காமினி லொக்குகேவின் தலையீட்டினால் அந்த பகுதிகள் விடுவிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரிஷாத்தை சபைக்கு அழைக்கவேண்டாம்

## சரத் வீரசேகர கோரிக்கை

கொழும்பு, மே. 06

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ், கைதுசெய்யப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை பாராளுமன்றத்துக்கு அழைப்பதைத் தடை செய்யுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளதால், அவர் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டால் விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், இந்த கோரிக்கைக்கு எதிர்க்கட்சிகள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

# ரிஷாத் பாராளுமன்றம் செல்ல தடையில்லை

கொழும்பு, மே. 06

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்ய எவ்வித சட்ட ரீதியான தடைகளும் இல்லை என சட்டமா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

குற்றப்பலனாய்வுத்துறை பொறுப்பதிகாரி எழுத்துமூலம் விடுத்த கோரிக்கைக்கு, சட்டமா அதிபர் இந்த தெளிவுபடுத்தலை வழங்கியுள்ளார்.

சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி அரச சட்டவாதி நிஷாரா ஜெயரத்ன இதனைத் தெரிவித்தார்.

(அ)

# வவுனியா புதுக்குளம் முடக்கம்



வவுனியா, மே. 06

வவுனியாவில் குருக்கள் புதுக்குளம் பகுதி நேற்று காலை முதல் முடக்கப்பட்டுள்ளதாக கோவிட் தடுப்புச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில், கடந்த வாரமளவில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததுடன் அவர்கள், கிராமத்தில் இடம்பெற்ற சில நிகழ்வுகளிலும் கலந்துகொண்டிருந்தனர்.

இதையடுத்து, குறித்த இருவருடனும் தொடர்புகளைப் பேணிய 100 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன் கிராமத்தில் தொற்றுநீக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், குருக்கள் புதுக்குளம் பகுதி நேற்று காலையிலிருந்து முடக்கப்பட்டுள்ளது.

# பைசர் நிறுவனத்திடம் இருந்து இலங்கைக்கு 10 லட்சம் தடுப்பூசி



கொழும்பு, மே. 06

எதிர்வரும் 3 மாதங்களில் ஒரு இலட்சம் தடுப்பூசிகளையும், அதனைத் தொடர்ந்து 10 இலட்சம் தடுப்பூசிகளையும் இலங்கைக்கு வழங்க பைசர் நிறுவனம் எதிர்பார்த்துள்ளதாக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இந்தியாவின் 'சீரம்' நிறுவனத்திடமிருந்து கொரோனா தடுப்பூசிகள் கிடைத்திருந்தன.

இதனைத் தொடர்ந்து சீனாவிடமிருந்து 6 இலட்சம் 'சினோபாம்' தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைத்தன. இதே வேளை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் அமெரிக்காவின் 'பைசர்' நிறுவனத்துடனும், ரஷ்யாவின் ஸ்புட்னிக் நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றன.

ஸ்புட்னிக் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைக்கு 13 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கவிருக்கின்றன. பைசர் நிறுவனம் இந்த மாதத்தில் 35 ஆயிரம் தடுப்பூசிகளை வழங்கியுள்ளது.

எதிர்வரும் 3 மாதங்களில் ஒரு இலட்சம் தடுப்பூசிகளையும், அதனைத் தொடர்ந்து 10 இலட்சம் தடுப்பூசிகளையும் இலங்கைக்கு வழங்க பைசர் நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஊடாக விநியோகிக்கப்படும் அஸ்ட்ராசெனேகா தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சு தற்சமயம் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சட்டமா அதிபரின் பதவிக் காலத்தில் 27,206 குற்றவியல் வழக்குகள் நிறைவு

கொழும்பு, மே 06
கடந்த 2019 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2021 மே மாதம் வரையான தமது பதவிக் காலத்தில் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவினால் 27,206 குற்றவியல் வழக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தை சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன இதனை தெரிவித்தார்.

## "கொரோனா பரவலுக்கு மக்களின் அவதானமின்மையே காரணம்!"

கொழும்பு, மே 06
பொதுமக்களின் கவனயீனத்தால் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வருவதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்துக்குள் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 70 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

## மரண அறிவித்தல்



மலர்வு 10 - 03 - 1942

உதிர்வு 28 - 04 - 2021

### திருமதி வீரபாகு பாக்கியம்

**வவுனியா - ஐக்கியஅமெரிக்கா**

வவுனியா கருங்காலி குளத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா கள்ளிக்குளத்தை வசிப்பிடமாகவும், தற்போது ஐக்கியா அமெரிக்காவை வசித்து வந்தவருமான வீரபாகு பாக்கியம் அவர்கள் 28-04-2021 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார், காலஞ்சென்ற முத்தையா – தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளையதம்பி – அபிராமி தம்பதியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வீரபாகு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணபவானந்தன், விஜயகுமாரி மற்றும் சிவலோகநாதன் (லண்டன்), செல்வராணி (பிரான்ஸ்), கிருஷ்ணகுமாரி (ஐக்கிய அமெரிக்கா), ஐங்கரன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, லெட்சுமி செல்லாச்சி (இலங்கை), பாக்கியநாதன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகரத்தினம், சுப்பிரமணியம் (இலங்கை), மகேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற தருமர், கதிர காமநாதன் (இலங்கை), சின்னக்கிளி (இலங்கை), நாகமுத்து (இலங்கை), காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை பொன்னம்மா, வள்ளிப்பிள்ளை, கந்தப்பு ஆகியோரின் மைத்துனியும், சிவமதி (லண்டன்), சிறீதரன் (பிரான்ஸ்), சிவனேசநாதன் (அப்பு- ஐக்கிய அமெரிக்கா), மாலினி (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனேஸ், சாரங்கன், டிலுக்சன், சரணியா, துர்க்கா, துசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நல்லடக்கம்**
Get DirectionThursday, 06 May 2021 2:00 PM - 3:00 PM
A. S. Turner & Sons
2773 N Decatur Rd, Decatur, GA 30033, United States

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**
**சிவலோகநாதன் லண்டன் (மகன்) - 00447440224591**
**செல்வராணி பிரான்ஸ் (மகள்) - 0033751508029**
**கிருஷ்ணகுமாரி ஐக்கிய அமெரிக்கா (மகள்) - 0014046656493**
**ஐங்கரன் ஐக்கிய அமெரிக்கா (மகன்) - 0014042871767**

# எந்த ஒரு தேர்தலுக்கும் முகங்கொடுக்க தயார்!

### சுதந்திரக் கட்சி அறிவிப்பு



**கொழும்பு,மே06**
**எதிர்வரும் எந்தவொரு தேர்தலுக்கும் முகங்கொடுப்பதற்கு தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.**

**அதன் சிரேஷ்ட உப தவிசாளர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்து போட்டியிட வேண்டும் என கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.

எவ்வாறாயினும் கொள்கை ரீதியான தீர்மானங்கள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அதேநேரம் கடந்த தேர்தல் காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கூட்டணி ஒன்று உருவாக்கப்பட்டது.

இதற்காக உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. எனினும், குறித்த உடன்படிக்கை தற்போது மீறப்படுகிறது-என்றார்.

## இரணைதீவில் தனிமைப்படுத்தப்பட்ட 24 பேருக்கு நேற்று பி.சி.ஆர். சோதனை

யாழ்ப்பாணம், மே 06
இரணைதீவில் சுய தனிமைப்படுத்தப்பட்ட சுமார் 24 பேருக்கு நேற்று புதன்கிழமை காலை பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரீ.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவில் இருந்து தலைமன்னார் பகுதிக்கு சட்ட விரோதமான முறையில் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் வருகை தந்த நிலையில் கைது செய்யப்பட்ட 2 நபர்களும், அவர்களை அழைத்து வந்தவர்கள் என 3 நபர்களுக்கு நேற்று சுயதனிமைப்படுத்தப்பட்ட இரணைதீவுப் பகுதியில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து வருகை தந்தவர்களில் ஒருவர் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஏனைய 3 நபர்களுக்கும் நேற்று பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கடற்படையினர் மற்றும் பொலிஸார் உட்பட குறித்த 21 பேருக்கும் இவர்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இரணைதீவு பகுதியில் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன-என்றார்.

## இரண்டு இலட்சம் மாணவர்கள் பல்கலைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மே 06
வெளியிடப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளின்படி, ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 297 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை மூன்று இலட்சத்து 62 ஆயிரத்து 824 பேர் பரீட்சை எழுதிய நிலையில், அவர்களில் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்கள் 64.39 வீதமாகும்.

அத்துடன், பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 86 பேரின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் 39 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, மே 06
இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் 39 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் அண்மையில் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையின்படி 39 பேர் கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணிய அனைவரும் சுய தனிமைப்படுத்தலை மேற்கொள்ளுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

## கொரோனா சிகிச்சை மையமாக மாறிய பூஸா கடற்படை முகாம்

கொழும்பு, மே 06
காலி பூஸா கடற்படை முகாமில் ஒரு இடைநிலை கொரோனா சிகிச்சை மையம் நிறுவப்பட்டுள்ளது.

நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க 12 விடுதிகள் மற்றும் 162 படுக்கைகள் அங்கு உள்ளன.

கடற்படையின் பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் நான்கு மாடி கட்டடமே இவ்வாறு இடைநிலை பராமரிப்பு மையமாக மாற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த மையத்தில் 12 படுக்கைகள் கொண்ட நவீன வசதிகளை கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு அலகும் உள்ளது.

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க இரண்டு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் சிகிச்சை மையத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

# சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைவோரால் எமக்கு ஆபத்து

## யாழ். மக்களுக்கு அரச அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே06

**இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசிக்கும் நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார். தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது யாழ். மாவட்டத்தில் கொரோனா நிலைமை சற்று அதிகரித்த நிலைமை காணப்படுகின்றது. கடந்த வாரங்களில் இது குறைவடைந்த போக்கை காட்டியது. இருந்தபோதிலும் நேற்று முன்தினத்தில் 37 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு பின்னர் 1,643 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

19 இறப்பு கடந்த வாரம் வரை பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் 968 குடும்பங்களைச் சேர்ந்த 1,995 நபர்களை சுய தனிமைப் படுத்தி உள்ளோம்.

நேற்று முன்தினம் மாலையில் கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனையின்படி கொடிகாமம் நகரப் பகுதியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனையடுத்து கொடிகாமம் சந்தைப் பகுதி அதனுடன் இணைந்த கடைத்தொகுதி, கொடிகாமம்வடக்கு, கொடிகாமம்மத்தி ஆகிய இரண்டும் நேற்று காலை தொடக்கம்தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்தப்பகுதியில் சுகாதாரப்பிரிவினர்தொடர்ச்சியான பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு அந்த கிராம மக்களை தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறார்கள். இருந்தபோதிலும் தற்போது தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் இடர் நிலைமை காணப்படுவதன் காரணமாக மக்களின் நன்மை கருதி சுகாதாரப்பிரிவினரால் கொடுக்கப்பட்டிருக்கும் சுகாதார வழிகாட்டல்களை, அரசாங்கத்தினால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றி பொதுமக்கள் நடந்து கொள்ள வேண்டும். இதற்குரிய விழிப்புணர்வு செயற்பாடுகள் கிராம மட்டத்திலும் இடம் பெற்று வருகின்றன.

ஆகவே பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினரின் அறிவுரைகளை பின்பற்றி இணங்கிச் செயல்பட வேண்டியது அவர்களின் கடப்பாடாக காணப்படுகின்றது. இந்த இக்கட்டான காலகட்டத்தில் அநேகமாக தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து வீடுகளிலிருந்து செயல்படும்படி நாங்கள் பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

அவசியமற்ற ஒன்றுகூடல்கள் பயணங்களை தவிர்த்து நிகழ்வுகளைத் தவிர்த்து வீடுகளிலிருந்து செயற்படுதல் மிகவும் சிறந்ததாகும். அது ஒரு பாதுகாப்பாகவும் காணப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழ் நாட்டில் தொற்று நிலைமை அதிகரித்துள்ள நிலையில் மக்கள் கடல் கடந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் பிரவேசிப்பதற்குரிய நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 11 படகுகள் கைப்பற்றப்பட்டதாக அறிய முடிகின்றது. மேலும் இந்த நடவடிக்கை குறித்து ஆழ்கடல் மீனவர்களுக்கும் அதேபோல மீன்பிடி சமூகத்தினருக்கும் கரையோரப் பகுதியில் உள்ள பொது மக்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு கண்காணிப்புச் செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளோம். கடலில் ரோந்து நடவடிக்கைகளும் கடற்படையினர் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதை தவிர்த்து நமது மாவட்டத்தை தொற்றிலிருந்துபாதுகாக்க உதவ வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ-03)

# பதுளையில் 6 மாணவருக்கு கொரோனா தொற்று உறுதி

கொழும்பு, மே 06

பதுளையில் பிரபல பாடசாலையொன்றில் தரம் 9இல் கல்வி கற்று வந்த ஆறு மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அவர்கள் பிந்துனுவெவை கோவிட் 19 சிகிச்சை நிலையத்திற்கு, நேற்று அனுப்பப்பட்டனர் என பதுளை பொது சுகாதாரப் பரிசோதகர் பியல்பத்ம தெரிவித்தார்.

ஆறு மாணவர்களில் ஒரு மாணவனின் பெற்றோருக்கு கோவிட் 19 தொற்று உறுதிப் படுத்தப்பட்டதால், அவர்கள் பிந்துனுவெவை கோவிட் - 19 சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, அவ்வீட்டாருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் அறிக்கைக்கமைய அந்த மாணவனுக்கும்தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

அத்துடன், அந்த மாணவன் தொடர்பை ஏற்படுத்தியிருந்த ஏனைய மாணவர்கள் ஐவருக்கும் அன்ரிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோது, அந்த மாணவர்களுக்கும் தொற்று உறுதியாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்கள் ஆறுபேரும் ஒன்றாக இருந்து கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவர்களென்றும் தெரியவந்துள்ளது.

# நுவரெலியா மாவட்டத்துக்கு ஒரே ஒரு பி.சி.ஆர். இயந்திரம்!

கொழும்பு, மே06

நுவரெலியா மாவட்டத்திற்கு ஒரே ஒரு பி.சி.ஆர் இயந்திரமே இருக்கின்றது. இன்றைய சூழ் நிலையில் இன்னும் ஒரு பி.சி.ஆர் இயந்திரம் அவசரமாக தேவைப்படுகின்றது. அதனை பெற்றுக் கொடுக்க சுகாதார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னிணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்-

இன்றைய சூழ்நிலையில் கொரோனா தொற்று மிகவும் வேகமாக பரவி வருகின்றது. குறிப்பாக நுவரெலியாவில் 104 பேர் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கடந்த 28 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படியே இந்த எண்ணிக்கை இனம் காணப்பட்டுள்ளது.

அதற்கு காரணம் ஒரே ஒரு பி.சி.ஆர். இயந்திரமே செயற்படுகின்றது. சரியான முறையில் பி.சி.ஆர் சோதனைகள் செய்யப்படுமாக இருந்தால் இன்னும் அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்படுவார்கள். பி.சி.ஆர். சோதனை முடிவுகள் மிகவும் மந்த கதியிலேயே வெளிவருகின்றது.

தொற்றாளர்கள் திறந்த வெளியிலும் பொது இடங்களில் சுயாதீனமாக செயற்படுகின்றார்கள் அவர்களை இனம் கண்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாக இருந்தால் பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டும். முடிவுகள் மிக விரைவாக வெளிவரவேண்டும்.

இதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் தொற்று பரவுவதை எந்த காரணம் கொண்டும் கட்டுப் படுத்த முடியாது. எங்களுடைய பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இதுவரையில் முறையான பி.சி.ஆர். சோதனையோ அல்லது தடுப்பூசியோ இன்னும் வழங்கப்படவில்லை. இன்றைய சூழ்நிலையில் அநேகமானவர்கள் வீட்டிற்குள் முடங்கியிருக்கின்ற இந்த நிலையில் எங்களுடைய தாய்மாரும் சகோதரர்களும் களத்தில் இருந்து தொழில் செய்கின்றார்கள்.

அவர்கள் தொழில் செய்வதன் காரணமாகவே எங்குளுடைய நாட்டின் பொருளாதாரம் ஒரளவேனும் நிலையாக இருக்கின்றது. அவர்கள் தங்களுடைய வேலை செய்வதை நிறுத்தினால் நிலைமை என்ன?

அரசாங்கம் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று அரசாங்கம் பாதுகாப்பு பிரிவினர் சுகாதார துறையினர் ஏனையவர்களுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை எங்களுடைய பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும்-என்றார்.

# மந்திகை சந்தை மூடப்பட்டது!

யாழ்ப்பாணம், மே. 06

வடமராட்சி மந்திகை பொதுச்சந்தை சுகாதார உத்தியோகத்தர்களால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. நாட்டில் தீவிரம் பெற்றுள்ள கொரோனாப் பரவல் யாழ்ப்பாணத்திலும் மிக அதிகளவில் பரவி வருகின்றது. இருந்தபோதிலும் சுகாதார நடைமுறைகளை புறந்தள்ளி அக்கறையின்றிச் செயல்பட்டமையால் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைப் பிடிப்பதாக சம்பந்தப்பட்டவர்கள் வாக்குறுதி வழங்கினால் அது மீளத் திறக்கப்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

# வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளராக யோகராஜா தெரிவு

வவுனியா, மே. 06

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் புதிய தவிசாளராக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டைச் சேர்ந்த தர்மலிங்கம் யோகராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்தமுறை இடம்பெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை மற்றும் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

அதற்கமைய சபையின் தவிசாளர் பதவியை ஆட்சிகாலப்பகுதியில் இரண்டரை வருடங்கள் என பங்கிட்டுவகிப்பதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் புளொட் மற்றும்ரெலோகட்சிகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அதற்கமைய வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர்கள் தமது பதவியைஇராஜினாமா செய்திருந்தனர்.

அந்தவகையில் கரைத் துறைப் பற்று பிரதேச சபையின் புதிய தவிசாளர் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், வவுனியா தெற்கு பிரதேசசபையின் புதிய தவிசாளருக்கான தேர்தல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் புளொட் பிரதிநிதியான த.யோகராஜாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டதுடன் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரால் வழிமொழியப்பட்டது. வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்படவில்லை. இந்நிலையில் யோகராஜா போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் மொத்தமாக 30 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதுடன் அதிகபட்சமாக, தமிழ் கூட்டமைப்பு 11 உறுப்பினர்களை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி சுகாதார பணிமனை பணியாளருக்கும் தொற்று உறுதி

கிளிநொச்சி, மே 06

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் பணியாற்றும் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பணியாளர் அண்மையில் கொழும்பு மாவட்டத்துக்குச் சென்று திரும்பியிருந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தபோது தொற்று உறுதி செய்யப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர், மருத்துவர் என்.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

# நாம் தமிழருக்கு விழுந்த வாக்குகள் சொல்வது என்ன?

> “நாம் தமிழர் கட்சிக்கு கிடைத்திருக்கும் வாக்குகள் தொடக்கத்தில் இருந்தே பலரையும் கவனிக்க வைத்திருக்கின்றன. காங்கிரஸ் எம்.பி.யான கார்த்தி சிதம்பரம் இதை “ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கும் அரசியல் கட்டமைப்பை எதிர்க்கும் வாக்கு” என்று தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்கு வாக்களிப் போரைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் பதிவு செய்துள்ளார்.”



எம்.மணிகண்டன்

நாம் தமிழர் கட்சி இந்தத் தேர்தலில் ஓர் இடத்தில் கூட வெற்றிபெறவில்லை. ஆனாலும் 170-க்கும் அதிகமான இடங்களில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு அடுத்த இடத்தைப் பிடித்திருக்கிறது நாம் தமிழர் கட்சி.

இது எப்படி சாத்தியமாயிற்று. அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கூறுவதைப் போல திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக நாம் தமிழர் கட்சி உருவெடுத்து வருகிறதா?

நாம் தமிழர் கட்சி 2016-ஆம் ஆண்டு நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு 1.1 சதவிகித வாக்குகளைப் பெற்றது. ஒரு தொகுதியில் கூட வெற்றிபெற முடியவில்லை. 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலிலும் அனைத்துத் தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு தோல்வியடைந்தது. அதில் 3.9 சதவிகித வாக்குகளைப் பெற்றது. அந்தத் தேர்தலில் முதன் முறையாகக் களமிறங்கிய அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் 5.5 சதவிகித வாக்குகளையும், கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் 3.7 சதவிகித வாக்குகளையும் பெற்றன.

நடந்து முடிந்திருக்கும் 2021 சட்டப் பேரவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி சுமார் 7 சதவிகித வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இது கடந்த சட்டப் பேரவைத் தேர்தலைவிட ஆறரை மடங்கு. மக்களவைத் தேர்தலில் பெற்றதை விட ஏறத்தாழ இரண்டு மடங்கு. ஒரு தொகுதியில்கூட வெற்றபெற முடியவில்லை என்றாலும், ஆட்சியைப் பிடித்திருக்கும் தி.மு.க, எதிர்க்கட்சி வரிசையில் அமரப்போகும் அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்ற கட்சியாக நாம் தமிழர் இருக்கிறது.

நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிட்டு மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

அவர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 48 ஆயிரத்துக்கும் சற்று அதிகம். வாக்கு சதவிகிதம் 24.3. மற்ற தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் பெற்ற வாக்கு சதவிகிதம் இந்த அளவுக்கு இல்லையென்றாலும், 170-க்கும் அதிகமான தொகுதிகளில் மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் அளவுக்கு வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

இந்தத் தரவுகள் தமிழர் கட்சியின் படிப்படியான முன்னேற்றத்தைக் காட்டுகிறது என்கிறார் மூத்த பத்திரிகையாளர் கணபதி.

“சிந்தாந்த ரீதியாக தொடர்ந்து உறுதியுடன் இருக்கும் அரசியல் இயக்கங்கள் தேர்தல் அரசியலில் வெற்றி பெறுவதை வரலாற்றில் பார்த்திருக்கிறோம். திமுகவும் இப்படி வளர்ந்த இயக்கம்தான். அந்த வகையில் கடந்த 3 தேர்தல் களிலும் நாம் தமிழர் கட்சி படிப்படியாக வளர்ந்திருக்கிறது “ என்கிறார் அவர்.

நாம் தமிழர் கட்சியின் செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான இடும் பாவனம் கார்த்திக்குக்கு தேர்தல் முடிவுகளில் திருப்தியில்லை. “தேர்தலில் நாங்கள் எதிர்பார்த்த அங்கீகாரம் கிடைக்கவில்லை” என்றார் அவர். இருப்பினும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் சுமார் 30 லட்சம் வாக்குகளையும் 7 வீத வாக்கு விகிதத்தையும் மாற்றத்துக்கான விதைகளாகவே கருதுவதாக அவர் கூறுகிறார்.

“வரலாற்றில் நாம் தமிழர் கட்சியைப் போல தேர்தல் சமரசம் செய்து கொள்ளாத கட்சி எதுவுமில்லை. தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ் உள்பட அனைத்துக் கட்சிகளும் அவ்வப்போது சமரசம் செய்துகொள்கின்றன” என்கிறார் இடும்பாவனம் கார்த்திக்.

நாம் தமிழர் கட்சிக்கு கிடைத்திருக்கும் வாக்குகள் தொடக்கத்தில் இருந்தே பலரையும் கவனிக்க வைத்திருக்கின்றன. காங்கிரஸ் எம்.பி.யான கார்த்தி சிதம்பரம் இதை “ஏற்கெனவே நிறுவப்பட்டிருக்கும் அரசியல் கட்டமைப்பை எதிர்க்கும் வாக்கு” என்று தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர்களுக்கு வாக்களிப்போரைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் பதிவு செய்துள்ளார்.

இதேபோன்றதொரு கருத் தைப் பதிவு செய்திருக்கும் இயக்குநர் சேரன், வேட்பா ளர்கள் தோல்வி கண்டாலும் கட்சி வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். நாம் தமிழர் கட்சி வாக்கு விகிதங்களில் வளர்ந்து வந்தாலும் அந்தக் கட்சிக்கு பலவிதமான சவால்களும் நெருக்கடிகளும் இருப்பதாக மூத்த பத்திரிகையாளர் கணபதி கூறுகிறார்.

“சீமானின் பேச்சுக்கு இளைஞர்களை ஈர்க்கும் ஆற்றல் இருக்கிறது. அவரை நம்பி ஏராளமான இளைஞர்கள் வருகிறார்கள். அவர்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். கட்சியில் இருந்து முக்கியத் தலைவர்கள் தொடர்ந்து விலகினால் தொண்டர்கள் நம்பிக்கை இழக்க நேரிடும். அதேபோல கூடிய விரைவில் அரசியல் பதவிகளைப் பிடிக்க வேண்டும்.” என்கிறார் கணபதி.

“தற்கால அரசியல் சூழலில் கொள்கை மட்டுமே அரசியலில் வெற்றிபெறப் போதுமானது இல்லை. காலத்துக்குத் தக்கபடி நவீன உத்திகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பிற கட்சிகளில் இருந்து பெரிய தலைவர்கள் நாம் தமிழர் கட்சிக்கு வந்தால் கட்சி அரசியல் ரீதியான ஆற்றல் கிடைக்கும். அ.தி.மு.க, தேமுதிக போன்ற கட்சிகளின் தொடக்க காலம் இப்படிக் கட்டமைக்கப்பட்டது தான்” என்று குறிப்பிடுகிறார் கணபதி.

“அரசியல் அதிகாரத்தை நோக்கிய பாய்ச்சல்” என்று தங்களது தேர்தல் உத்தியைப் பற்றிக் குறிப்பிடும் இடும்பாவனம் கார்த்திக், நாம் தமிழர் கட்சியின் இலக்கு அதுதான் என்கிறார். தி.மு.க, அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளில் இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்யும் மக்களின் எதிர்ப்பு வாக்கு மனநிலையே தங்களது வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

ஆயினும் தற்போது அமையும் தி.மு.கவின் ஆட்சியால் இரு திராவிடக் கட்சிகளின் மீதும் மக்கள் நம்பிக்கை இழப்பார்கள் என்றும் அவற்றுக்கு மாற்றாக நாம் தமிழருக்கு வாக்களிப்பார்கள் என்றும் இடும்பாவனம் கார்த்திக் நம்புகிறார்.

“2024 மக்களவைத் தேர்தலிலும், 2026 சட்டப் பேரவைத் தேர்தலிலும் நாம் தமிழர் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்” என்கிறார் அவர்.





# 3 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய தடுப்பு முகாமிலுள்ள தமிழ் குடும்பம் விடுதலை?

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவு தடுப்புமுகாமில் கடந்த பல மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள பிரியா-நடேஸ் குடும்பம் விரைவில் விடுவிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் புதிய உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள Karen Andrews, ஏ.பி.ஸி. வானொலியுடனான நேர்காணலின்போது இக்குடும்பத்தின் விடுதலை தொடர்பில் கோடிகாட்டியுள்ளார்.

பிரியா-நடேஸ் குடும்பம் பற்றி கேட்கப்பட்டபோது, இக்குடும்பத்தினரின் வாழ்க்கைச்சூழல் தொடர்பில் கேட்டறிந்துகொண்டதாக கூறிய அவர், இக்குடும்பத்தினரிடம் சட்டப்போராட்டம் முடிவடையும்வரை அவர்கள் கிறிஸ்மஸ் தீவிலேயே ஏனைய சமூகத்தினருடன் இணைந்து வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதை மறைமுகமாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 3 ஆண்டுகளுக்கு மேல் தடுப்பு முகாமில் வாழ்ந்துவரும் பிரியா-நடேஸ் குடும்பத்தின் நிலைமையைப் பார்த்து அவர் மனம் இரங்கவில்லையா எனக் கேட்கப்பட்டபோது, தான் பொதுவிலேயே இரக்ககுணம் உள்ளவர் எனக் குறிப்பிட்ட அமைச்சர் Karen Andrews, இக்குடும்பம் பற்றிய தனது மன உணர்வுகளை வெளிப்படுத்த மறுத்துவிட்டார்.

புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களான பிரியா- நடேஸ் தம்பதி மற்றும் அவுஸ்திரேலியாவில் பிறந்த அவர்களது இரண்டு மகள்கள் கோபிகா மற்றும் தருணிகா ஆகியோரது தடுப்புமுகாம் வாழ்க்கை கடந்த மார்ச் மாதத்துடன் மூன்று ஆண்டுகளை எட்டியிருந்தது.

குறிப்பாக 3 வயதான தருணிகா தனது 3 வருட வாழ்க்கையையும் தடுப்புமுகாமிலேயே கழித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இவ்வளவு நீண்டநாட்கள் தடுப்புமுகாமிலிருக்கும் குழந்தையாக தருணிகா உள்ளார் என குறிப்பிடப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் நோக்கில் நடேசலிங்கமும் பிரியாவும் தனித்தனியாக கடந்த 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் படகு மூலம் ஆஸ்திரேலியா வந்தடைந்தனர்.

நடேசலிங்கம் மற்றும் பிரியாவின் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட அதேநேரம் இவர்களுக்கு வழங்கப்பட்ட bridging விசாவும் 2018 ஆரம்பத்துடன் காலாவதியாகிவிட, அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை இறங்கியது.

2018 மார்ச் மாதம் இக்குடும்பம் பல காலமாக வாழ்ந்துவந்த குயின்ஸ்லாந்தின் Biloela பகுதியிலிருந்து அவர்களை பலவந்தமாக அழைத்துச்சென்று நாடு கடத்த முற்பட்ட வேளையில் சட்டநடவடிக்கை காரணமாக அம்முயற்சி இறுதிநேரத்தில் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் மெல்பர்ன் குடிவரவு தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டனர்.

இதையடுத்து நடேசலிங்கம்-பிரியா குடும்பம், நாடு கடத்தப்படக்கூடாதென வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 2018 ஜூன் 21 அன்று மெல்பர்ன் பெடரல் circuit நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து மீண்டும் இக்குடும்பத்தை நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கிய குடிவரவுத்துறை அதற்கான கடிதத்தையும் தீர்ப்பு வெளியான அடுத்தநாளே கையளித்தது. ஆனால் நீதிமன்றின் தீர்ப்பிற்கெதிராக நடேசலிங்கம்-பிரியா குடும்பம் மேன்முறையீடு செய்திருந்ததால் குறித்த குடும்பம் நாடுகடத்தப்படுவது இரண்டாவது தடவையாகவும் தடுக்கப்பட்டது.

ஆனால் இக்குடும்பத்தின் மேன்முறையீட்டு மனுவை

> **புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களான பிரியா - நடேஸ் தம்பதி மற்றும் அவுஸ்திரேலியாவில் பிறந்த அவர்களது இரண்டு மகள்கள் கோபிகா மற்றும் தருணிகா ஆகியோரது தடுப்புமுகாம் வாழ்க்கை கடந்த மார்ச் மாதத்துடன் மூன்று ஆண்டுகளை எட்டியிருந்தது. குறிப்பாக 3 வயதான தருணிகா தனது 3 வருட வாழ்க்கையையும் தடுப்புமுகாமிலேயே கழித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் இவ்வளவு நீண்டநாட்கள் தடுப்புமுகாமிலிருக்கும் குழந்தையாக தருணிகா உள்ளார் என குறிப்பிடப்படுகிறது.**

2018 டிசம்பர் 21ஆம் திகதி விசாரித்த பெடரல் நீதிமன்றம் அதனைத் தள்ளுபடி செய்த துடன் இக்குடும்பத்தை நாடுகடத்துமாறும் உத்தரவிட்டிருந்தது.

பின்னர் இக்குடும்பம் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தநிலையில் அதுவும் நிராகரிக்கப்பட்டது.

இப்படியாக சுமார் ஒன்றரை வருடங்களாக இக்குடும்பம் மெல்பனிலுள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

கடந்த 2019 ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தும் நோக்கில் சிறப்பு விமானமொன்று அவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட போதிலும், இறுதி நேரத்தில் குழந்தை தருணிகா சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் நீதிமன்றம் கடைசி நிமிட தடை உத்தரவை பிறப்பித்ததைத் தொடர்ந்து விமானம் டார்வினில் தரையிறங்கிய போது குடும்பம் விமானத்தை விட்டு வெளியேற்றப்பட்டு பின்னர் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பப்பட்டது.

இதையடுத்து தருணிகாவின் பாதுகாப்பு குறித்தும், தருணிகாவின் சூழ்நிலைகளை உள் துறை அமைச்சர் மதிப் பீடு செய்திருக்க வேண் டுமா என்பது குறித்தும் விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம், பிரதான விண் ணப்பதாரியான தருணிகாவின் விண்ணப்பம் தொடர் பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் இவ்விசாரணை முடியும் வரை அவர் நாடு கடத்தப்படக்கூடாது எனவும் உத்தரவிட்டது.

தருணிகா குழந்தை என்பதால் அவரிடமிருந்து பெற்றோரை தனியாகப்பிரித்து நாடுகடத்தமுடியாது என்பதால் முழுக்குடும்பமும் நாடுகடத்தலிலிருந்து தப்பித்து தொடர்ந்தும் சட்டப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளையில், பிரியா-நடேஸ் குடும்பத்தினரை அவுஸ்திரேலியாவின் புதிய உள்துறை அமைச்சர் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி விடுதலை செய்ய வேண்டும் என முன்னாள் பிரதமர் Malcolm Turnbull அண்மையில் வலியுறுத்தியிருந்தார்.

ABC தொலைக்காட்சியின் Q+A நிகழ்வில் கலந்து கொண்டபோது கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்ட விடயத்தினை வலியுறுத்தியிருந்தார்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் எல்லைப்பாதுகாப்பு கொள்கை எனப்படுவதும் மிகவும் கடுமையானது என்பதை ஒப்புக்கொண்ட Malcolm Turnbull, பிரியா-நடேஸ் குடும்பத்தினரது தடுப்பு விடயத்தில் பரிவை யும் மனிதாபிமானத்தையும் கொஞ்சமாவது காண்பிக்க வேண்டும் என்றார்.

பிரியா-நடேஸ் தம்பதிகளையும் அவுஸ்திரேலியாவில் பிறந்த அவர்களது குழந்தைகளையும் குயின்ஸ்லாந்துக்கு அனுப்புவதே சரியான முடிவாக இருக்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரியா-நடேஸ் குடும்பத்தினர் தடுப்புக்கு கொண்டு செல்லப்படும்போதும், அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருந்த கடைசிநேரத்தில் வழக்கொன்றின் மூலம் தடுத்துநிறுத்தப்பட்டபோதும் Malcolm Turnbull பிரதமராக பொறுப்பிலிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- S.B.S., **அவுஸ்திரேலியா**

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 1 விடைகள்
நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - மு.வே.அன்பழகன்

### இல - 1 வினாத்தாள் - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 3 | 21. 4 | 31. 2 |
| 2. 1 | 12. 3 | 22. 2 | 32. 3 |
| 3. 1 | 13. 2 | 23. 3 | 33. 2 |
| 4. 3 | 14. 3 | 24. 3 | 34. 2 |
| 5. 2 | 15. 3 | 25. 2 | 35. 1 |
| 6. 3 | 16. 1 | 26. 2 | 36. 3 |
| 7. 2 | 17. 2 | 27. 2 | 37. 2 |
| 8. 1 | 18. 1 | 28. 2 | 38. 1 |
| 9. 2 | 19. 3 | 29. 3 | 39. 2 |
| 10. 2 | 20. 4 | 30. 3 | 40. 2 |

### இல - 1 வினாத்தாள் - II விடைகள்

01)
i. ஆர்வத்தோடு / நல்ல ஆர்வத்தோடு
ii. அல்லும் பகலும்
iii. தந்தை தாயைப் பேணும்
iv. நீங்கள்
v. தந்தை
vi. தருமம்
vii. நன்மை
viii. தொண்டில் (8 புள்ளி)

02)
i. திருமணம்
ii. வளர்ச்சி
(2 புள்ளி)

03)
i. இன்னல்
ii. வானம்
(2 புள்ளி)

04)
i. ✓
ii. X (2 புள்ளி)

05)
i. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
ii. அலை மோதும் போதே தலை முழுகு
(2 புள்ளி)

06)
i. சகபாடி
ii. தீர்ப்பு
iii. அடிமை (3 புள்ளி)

07)
i. நன்றி புரிந்தோர் தம்மை நாமும் நினைக்க வேண்டும்.
(1 புள்ளி)

08)
i. நண்பி
ii. சுத்தவாளி
iii. 216
iv. தீபாவளி
v. கடற்கரை
(5புள்ளி)

09) நிகழ்காலத்தில் வசனம் அமைத்தல் வேண்டும்
(6 புள்ளி)

10)
i. Monkey
ii. Book
(2 புள்ளி)

11)
i. going
ii. are
(2 புள்ளி)

12) This is my book
(1 புள்ளி)

13)
i. கைகளை உயர்த்துங்கள்
ii. நீங்கள் ஆயத்தமா? (2 புள்ளி)

14)
i. அளியா
ii. கிரி பொன்ன
(2 புள்ளி)

15) i. புத்தகம் தாருங்கள் (2 புள்ளி)

16)
i. 7, 8, 6
ii. 964, 946, 694, 649, 496, 469

iv. 624
v. 1) 14
2) 9
vi. 1) 10l 100ml
2) 1071
3) 4,4,6
vii. 108
viii. 25
ix. 1) 8432 - எண்ணாயிரத்து நானூற்று முப்பத்திரண்டு
2) 400
x. 84
xi. 161 ரூபாய்
xii. 1) நூறுக்கள் / 100
2)3000
xiii. 8158
xiv. 9197
xv. 2100ml / 2l 100ml

(32 புள்ளி)

17.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 2. | 4 | 3. | 3 | 4. | 4 |
| 5. | 1 | 6. | 2 | 7. | 1 | 8. | 2 |
| 9. | 1 | 10. | 2 | 11. | 2 | 12. | 4 |
| 13. | 3 | 14. | 1 | 15. | 3 | 16. | 2 |
| 17. | 3 | 18. | 3 | 19. | 4 | 20. | 4 |
| 21. | 3 | 22. | 1 | 23. | 2 | 24. | 1 |
| 25. | 4 | 26. | 1 | 27. | 3 | 28. | 2 |

(28 புள்ளி)

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்
**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சுத்தோவிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## 10 ஆம் மாடியிலிருந்து விழுந்த 25 வயது இளைஞன் மரணம்!

கொழும்பு,மே 06

கட்டடம் ஒன்றின் 10ஆம் மாடியிலுள்ள மின்தூக்கி அமைந்துள்ள பகுதியிலிருந்து விழுந்த 25 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

கட்டுமாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த இந்தக் கட்டடத்தில் சேவை செய்த ஒருவரே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு கொள்ளுப்பிட்டி, மல்பார பகுதியிலுள்ள கட்டடம் ஒன்றிலேயே நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

25 வயது ரத்மலானை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (எ)

## சுகாதாரத் துறை சுதந்திரமாக செயல்பட இடமளிக்கவேண்டும்

### ராஜித எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,மே06

**இலங்கையின் தற்போதைய நிலை தொடர்ந்தால் தினந்தோறும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இந்தியாவை விட அதிகரிக்கலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எனவே, இது தொடர்பில் அரசியல் ரீதியில் தீர்மானம் எடுக்காமல் சுகாதாரப் பிரிவினர் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு இடமளிக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கொரோனா சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையில் கொரோனா மூன்றாம் அலைக்கு நாங்கள் முகம்கொடுத்து வருகின்றோம். கொரோனா தொற்று மிகவும் தீவிரமாகப் பரவி வருவதை காண்கின்றோம். தொற்றுக்குள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கொரோனா ஆரம்ப கட்டத்தில் இந்த தொற்று முதியவர்களுக்கே அதிகம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால்,



மூன்றாவது அலையில் சிறுவர்கள், இளைஞர்களும் பாதிக்கப்பட்டு வருவதைக் காண்கின்றோம். அதேபோன்று தொற்றுக்குரிய அறிகுறிகளும் வெளிப்படாமல் திடீரென காய்ச்சல் ஏற்பட்டு நிமோனியா நிலைமைக்கு மாற்றமடைகின்றது.

அதனால், இந்த நிலைக்கு ஒட்சிசனின் தேவை அதிகமாகும். நாட்டில் ஒட்சிசன் சிலிண்டர்களை எந்தளவு கையிருப்பில் வைத்திருக்கின்றோம் என்பது தொடர்பில் கவனித்துக்கொள்ளவேண்டும். வைத்தியசாலைகளுக்கு தேவையான ஒட்சிசன் உபகரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் கொரோனா மூன்றாம் அலை ஏற்படுவதற்கு அரசாங்கத்தின் கவனவீனமும் காரணமாகும். புத்தாண்டு காலத்தில் மக்கள் சுகாதார வழிகாட்டல்களை மறந்து நினைத்த பிரகாரம் நடமாட ஆரம்பித்தனர். அரசாங்கமும் இதுதொடர்பில் கருத்தில் கொள்ளாமல் பொறுப்பற்று இருந்தது. அதனால், இன்று நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் அதிக தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு வருகின்றனர். இந்நிலைக்கு அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும்- என்றார். (எ)

## நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு,மே 06

சப்ரகமுவ, மத்திய, மேல், தென், ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல்தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, காங்கேசந்துறையிலிருந்து மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புக்களில் காற்றானது தெற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். நாட்டைச்சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்களில் காற்றானது தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 20 - 30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புக்களிலும், புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புக்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புக்கள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புக்கள் மிதமான அலையுடன் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## எரிபொருள் விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானிக்கவில்லை

### அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு,மே 06

உலக சந்தையில் எரிபொருள் விலை சடுதியாக அதிகரித்துள்ளபோதிலும், இலங்கையில் எரிபொருள் விலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் இன்றும் தீர்மானிக்கவில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் எரிபொருள் விலை தொடர்பில் வினவிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துச்செல்வது சகலரும் அறிந்த விடயம்.

எனவே, இலங்கையிலும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்று எந்தவொரு யோசனையும் அமைச்சரவையில் முன்வைக்கப்படவில்லை.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துச் செல்வது உண்மையே, ஆனால், இலங்கையில் எரிபொருள் விலையில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் எவ்வித தீர்மானங்களையும் எடுக்கவில்லை- என்றார். (எ)

## புலனாய்வாளர்கள் என்று வருவோரை வீடுகளுக்குள் அனுமதிக்க வேண்டாம்

### பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்து

வவுனியா,மே 06

சிவில் உடையில் புலனாய்வாளர் எனத் தெரிவித்து விசாரணை செய்ய முனையும் நபர்களை வீடுகளுக்குள் அனுமதிக்க வேண்டாம் என வவுனியா பொலிஸார் அறிவுறுத்தியுள்ளார்.

தங்களை அரச புலனாய்வாளர்கள் என அடையாளப்படுத்திக்கொண்டு வவுனியா உட்பட வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில், வீடுகளில் சோதனை என்ற பெயரில் கொள்ளைச் சம்பவங்கள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பில்வவுனியா பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் இச்சம்பவங்கள் குறித்து வவுனியா பொலிஸார் பொது மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

தங்களை அரச புலனாய்வாளர்கள் அல்லது பொலிஸார் எனக் கூறிக்கொண்டு வீடுகளுக்கு விசாரணை என்ற பெயரில் செல்லும் நபர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் பொலிஸ் சீருடை இல்லாமல் விசாரணை என்ற பெயரில் வருபவர்களை, வீட்டுக்குள் அனுமதிக்க வேண்டாம் எனவும் வவுனியா பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு விசாரணை என்ற பெயரில் சிவில் உடையில் வரும் சந்தேகத்துக்கிடமான நபர்கள் குறித்து தங்களுக்கு அறிவிக்குமாறு, 024-222,2222, 024-222,2226, 071-8591343, 072-9977302, 071-4716286 ஆகிய இலக்கங்களையும் பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர். (எ)

## கைக்குண்டுடன் 'அசித' கைது!

கொழும்பு,மே 06

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவந்த அலிவத்தே அசித எனும் நபர் மட்டக்குளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வத்தள பகுதியில் இவர் தற்காலிகமாக தங்கியிருந்த வீட்டிலிருந்து கைக்குண்டு ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் இந்நபர் கடந்த காலங்களில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும்தெரியவந்துள்ளது. (எ)

## தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 173 பேர் சிக்கினர்

கொழும்பு,மே 06

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச்செயல்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலும் 173 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுப் புதன்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (எ)

## தனிமைப்படுத்தப்படும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கு சம்பளம்

கொழும்பு,மே 05

கொரோனா வைரஸ் தொற்று எச்சரிக்கையால் தனிமைப்படுத்தப்படுத்தப்படும் தனியார்த்துறை ஊழியர்களுக்கு நிறுவனங்கள் சம்பளம் வழங்க வேண்டும் என தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஊழியர்களைப் பாதுகாப்பதற்குத் தனியார் நிறுவனங்களில் சுகாதாரக் குழுக்களை அமைக்குமாறும் தொழில் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பில் தொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு ஆலோசனைவழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ)



# மூன்றாவது முறையாக முதல்வரானார் மம்தா!

கொல்கத்தா, மே 06

இந்தியாவின் மேற்குவங்க மாநிலத்தின் முதலமைச்சராக மம்தான பனர்ஜி நேற்று பதவி யேற்றார். மம்தாவின் கட்சி யான திரிணாமுல் காங்கிரஸ் 292 தொகுதிகளில் 213 தொகுதி களை கைப்பற்றி வெற்றி ஆட்சி யைப் பிடித்துள்ளது.

ஆனால், முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள மம்தா பனர்ஜி அவர் போட்டியிட்ட நந்திகிராம் தொகுதியில் தோல்வியடைந்துள்ளார். மறு வாக்கு எண்ணிக்கைக்காக உயர் நீதிமன்றை நாடியுள்ள நிலை யில் அவர் நேற்று முதல்வராகப் பதவியேற்றார்.

கொல்கத்தாவிலுள்ள ஆளு நர் மாளிகையான ராஜ்பவனில் மம்தா பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இந்தப் பதவியேற்பு நிகழ்வு மிக எளிமையாக மட்டுப்படுத்தப் பட்ட அளவினருடன் நடந்தது.

எனினும், மம்தா பனர்ஜி சட்டமன்ற உறுப்பினராக இல்லாமல் முதல்வராக பதவி யேற்பது இது முதல்முறை அல்ல. 2011ஆம் ஆண்டும் அவர் சட்டமன்ற உறுப்பின ராக அல்லாமல் பதவியேற்றார். பதவியேற்ற சில மாதங்களில் போவானிபூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற் றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீன தடுப்பூசிகளுக்கு அங்கீகாரம்! இந்த வாரத்தில் தீர்மானிக்கப்படும்

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு




ஜெனிவா, மே 06

சீனா உருவாக்கியுள்ள இரண்டு கொரோனா தடுப்பூசி களான சினோபார்ம், சினோவக் தடுப்பூசிகளை அவசர தேவை களுக்காக பயன்படுத்துவது குறித்து இந்த வாரத்தில் அறிவிக் கப்படும் என்ற உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் அறிக்கையில், "சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோபார்ம், சினோவக் கொரோனா தடுப்பு மருந்து களை அவசர தேவைகளுக்குப் பயன்படுத்துவது குறித்து இந்த வாரம் அறிவிக்கப்படும். சில நாடுகள் தடுப்பூசிகளை செலுத்துவதற்கு எங்கள் முடி வுக்காகக் காத்திருக்கின்றன என் பதை நன்கு அறிவோம். விரைவில் அறிவிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் சினோபார்ம் கொரோனா தடுப்பூசி ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் பயன்படுத் தப்பட்டு வருகின்றன.

ஆனால், பைஸர், மொடர்னா, ஸ்புட்னிக், கோவக்சின், அஸ்ட்ராஸெனகா ஆகிய தடுப்பூசிகளுக்கே உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனிடையே, ஐரோப்பிய ஒன்றியத்தின் மருந்துகள் ஒழுங்கு படுத்துகை குழு, சினோவக் தடுப்பூசியின் பாதுகாப்பு, செயல்திறன், தரம் குறித்து ஆய்வு செய்து வருகின்றது. இதில், சினோவக் தடுப்பூசி சிறந்த நோயெதிர்ப்பு ஆற்றலை உருவாக்கியுள்ளதாக அந்தக் குழு அறிவித்துள்ளது. மேலதிக ஆய்வுகளில் திருப்தி ஏற்பட் டால் சினோவக் தடுப்பூசிக்கு ஐரோப்பிய ஒன்றியம் அங்கீ காரம் வழங்கும் என்று தெரி விக்கப்பட்டது. (ஐ)

# சிறார் ஆபாசபடங்களை பகிர்ந்த மிகப்பெரிய இணையம் முடக்கம்!

பெர்லின், மே 06

சிறுவர்களின் ஆபாச படங் களை பதிவேற்றி, இரகசிய மாக இயங்கிய உலகின் மிகப்பெரிய வலைத்தளங்க ளில் ஒன்றை ஜேர்மன் பொலி ஸார் முடக்கியுள்ளனர்.

4 இலட்சத்துக்கும் அதிக மான பார்வையாளர்களை கொண்ட ஆபாச இணையம் ஒன்றே முடக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு முதல் பாவ னையில் இருந்த இந்த வலைத் தளம் உலகளாவிய ரீதியில் சிறுவர்களின் ஆபாச படங் களை பரிமாற்றியுள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த இணையத்தில் பதிவேற்றப்பட்ட படங்கள், காணொலிகளில் சிறாரை மிக மோசமாக பாலியல் துஷ்பிர யோகம் செய்யும் பதிவுகளும் உள்ளன என்று அந்நாட்டு வழக் கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வலைத்தளத்தை இயக்கியவர்கள் எனக் கூறப் படும் 4 பேரை பொலிஸார் கைது செய்தனர். அத்துடன், அந்த இணையத்தையும் செய லிழக்க செய்துள்ளனர். (ஐ)



# ஒரே பிரசவத்தில் 9 குழந்தைகள்! மேற்கு ஆபிரிக்க பெண் ஈன்றார்!!

ரபாட், மே 06

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஒரே பிரசவத்தில் 9 குழந்தைகளை பிரசவித்துள் ளார். ஹலிமாக சிஸ்ஸின் என்ற 25 வயது இளம் பெண்ணே இவ்வாறு 9 குழந்தைகளை ஈன்றெடுத்தார்.

மாலி நாட்டை சேர்ந்த இவர் கர்ப்பம் தரித்தபோது இவருக்கு நடத்தப்பட்ட ஸ்கான் பரிசோதனையில் 7 குழந்தைகள் கர்ப்பத்தில் இருந் தமை தெரிய வந்தது. இதை யடுத்து அவருக்கு சிறப்பு கண் காணிப்பு தேவை என்று கருதிய மருத்துவர்கள் மொராக்கோ நாட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

ஆனால், அங்கு அவருக்கு நேற்று முன்தினம் 9 குழந்தை கள் பிறந்தன. இதில், 5 பெண், 4 ஆண் குழந்தைகள் அடங்கு வர். குழந்தைகளும் தாயும் நல மாக உள்ளனர் என்று மாலி நாட்டின் சுகாதார அமைச்சர் பாண்டா சிபி தெரிவித்துள் ளார். (ஐ)

# புதிய சட்ட மூலத்தை நிராகரித்து அமேசன் காட்டை காப்பாற்றுங்கள்!

## பிரேஸில் எம்.பிக்களுக்கு பிரிட்டன் அழைப்பு



லண்டன், மே 06

முன்மொழியப்பட்டுள்ள நில சீர்திருத்த சட்டமூலம் தொடர்பில் 40 இங்கிலாந்து உணவு வணிகங்கள் பிரேஸி லுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

குழுவின் ஒரு திறந்த கடிதம், பொது நிலத்தின் தனியார் ஆக்கிரமிப்பை சட்டபூர்வமாக் கக்கூடிய அந்த சட்டமூலத்தை நிராகரிக்க பிரேஸிலின் பாராளுமன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், புதிய சட்டமூலம் அமேசனில் காட ழிப்பை துரிதப்படுத்தக்கூடும் என்று கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோத காடழிப்பு களை முடிவுக்கு கொண்டுவருவ தாக பிரேஸில் உறுதியளித்த சில மாதங்களிலேயே இந்த சட்டமூலம் அங்கு பரிசீலிக்கப் பட்டு வருகிறது.

இந்த சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு பாராளுமன்றில் இடம்பெறும் இன்று வியாழக் கிழமை என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பிரேஸில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் தலைமை யில், அமேசானில் காடழிப்பு அளவு 2008ஆம் ஆண்டுக்கு பின்னர் மிகவும் உயர்ந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு மட்டும் சுமார் 4 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் அமேசன் காடுகள் எரிக்கப்பட் டுள்ளது என்று அண்டியன் அமேசன் திட்டத்தின் கண் காணிப்பு தெரிவிக்கிறது.

மாட்டிறைச்சி ஏற்றுமதிக்கா கவோ, கால்நடைகளை மேய்ச் சலுக்காகவோ அல்லது சோயாவை வளர்ப்பதற்காகவோ பெரும்பாலான நிலங்கள் அழிக் கப்படுகின்றன. இது உலகெங்கி லும் உள்ள விலங்குகளின் தீவனத்திற்கு செல்கிறது.

ஏப்ரல் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நடத் திய உச்சிமாநாட்டில், போல் சனாரோ பிரேஸிலில் சட்ட விரோத காடழிப்புகளை முடி வுக்கு கொண்டுவருவதாக அறி வித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (ஐ)

# 3 சிறுவர்கள் உட்பட ஐவரை வெட்டிக் கொன்ற இளைஞன்!

பிரேஸிலியா, மே 05

பிரேஸிலில் சிறுவர் பராம ரிப்பு மையம் ஒன்றுக்குள் புகுந்த 18 வயது இளைஞன் அங்கி ருந்து 3 சிறுவர்கள் மற்றும் இரண்டு ஊழியர்களை வாளால் வெட்டி கொலை செய்துள்ளார்.

இந்தப் படுகொலைகளை நிகழ்த்திய பின்னர் தனது கழுத்தை வாளால் அறுத்த அவர் தற்போது ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேரக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் தெற்கு பிரேசில் - சாண்டா கேடரினா மாநிலத்தில், சவு டேட்ஸ் என்ற சிறிய நகரத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கொலைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நடந்தபோது பல சிறுவர்கள் பராமரிப்பு மையத் தில் இருந்தனர். அவர்களை அறை ஒன்றிக்குள் பூட்டி பராமரிப்பாளர்கள் பாதுகாத்த னர். வெட்டிக் கொல்லப்பட்ட 3 சிறுவர்களை பாதுகாக்க முயன்றபோதே இரு ஊழியர் களும் கொல்லப்பட்டனர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரி வித் தனர். (ஐ)

# மரண அறிவித்தல்

மலர்வு
05 - 06 - 1935



உதிர்வு
03 - 05 - 2021

## திருமதி வினிபிறட் கந்தையா

**(இளைப்பாறிய ஆசிரியை)**

யாழ்ப்பாணம் - அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பங்கைச் சேர்ந்தவரும் அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வாழ்ந்தவரும் இலங்கையின் பல பாகங்களில் ஆசிரியையாகக் கடமையாற்றியவருமான திருமதி வினிபிறட் கந்தையா அவர்கள் 03.05.2021 திங்களன்று கனடாவில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சின்னத்துரை- அலங்காரம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை- செல்லம்மா தம்பதியின் அன்பு மருமகளும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா செல்லத்துரை அவர்களின் (நவசி- முன்னாள் முகாமையாளர், இலங்கை மரக்கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், ஜெயவீரசிங்கம்(ஜெயா- பிரான்ஸ்), கோபாலசிங்கம் (டயா- பிரான்ஸ்), தர்மகுலசிங்கம்(ரகு- லண்டன்), மாலினி (கனடா), கோகுலசிங்கம்(ஜெனா- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

காலஞ்சென்ற பீற்றர், யேசுதாசன்(சிங்கம்), மாசிலாமணி டனிசியஸ், நேசராஜா, செல்வரட்ணம் மற்றும் அமுதம் செல்லத்துரை(கனடா), நவரட்ணம்(கனடா), சிசிலியா பேசி(இலங்கை), இமாக்குலட் சௌந்தரநாயகம்(பிரான்ஸ்), டெய்சி செல்வநாயகம்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சித்திரா(பிரான்ஸ்), ரதினி (பிரான்ஸ்), லில்லியன்(லண்டன்), சந்திரகுமார்(கனடா), தமயந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், பியோ, பியா, சோபன், நீல், அன்சன், நிவேத், சில்வன், பசில், நிவித்தா, ஜவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், செலேனா, செல்லியா, ஹரி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வுகள்**
**இரங்கல் திருப்பலி**
*06.05.2021 - 10.00 மணி முதல் 11.00 மணி வரை*
*தேவாலயம் :* St. Thomas the Apostle Roman Catholic Church
*முகவரி:* 14 Highgate Drive, Markham, ON L3R 3R6, Canada
**நல்லடக்கம்:**
*11.00 மணி முதல் 11.30 மணி வரை*
*சேமக்காலை :* Christ the King Catholic Cemetery
7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**
**ஜெயா - மகன்** Mobile : *+33614695606* **- பிரான்ஸ்**
**டயா - மகன்** Mobile : *+33634275810* **- பிரான்ஸ்**
**ரகு - மகன்** Mobile : *+447904185164* **- லண்டன்**
**மாலினி - மகள்** Mobile : *+16479631611* **- கனடா**
**ஜெனா - மகன்** Mobile : *+447474920730* **- லண்டன்**
**சந்திரகுமார் - மருமகன்** Mobile : *+14167091723* **- கனடா**

# கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்தவரும் அச்சுவேலி புனித தெரேசா மகளீர் கல்லூரியின் முன்னை நாள் ஆசிரியையுமாகிய 'வினி ரீச்சர்' என அன்புடன் அழைக்கப்படும்

## திருமதி வினிபிறற் கந்தையா

அவர்கள் கனடாவில் இறைவனடி சேர்ந்து விட்டார் என்கிற துயரச் செய்தியுடன் விடிந்தது இன்றைய பொழுது, ஓர் ஆசிரியையாக ஒரு பாசம் உள்ள தாயாக உறவாடிய அன்பு உள்ளம், அச்சுவேலி புனித தெரேசா மகளீர் கல்லூரியில் மேடையேறிய பல கலை நிகழ்ச்சிகளின் சொந்தக்காரி, விளையாட்டுத் துறையில் குறிப்பாக உடற் பயிற்சி போட்டிகளில் கோப்பாய் கல்வி வட்டாரத்திலும் சரி யாழ். மாவட்டத்திலும் சரி அச்சுவேலி புனித தெரேசா மகளீர் கல்லூரி பல தடவைகள் முதல் இடத்தை பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் வினி ரீச்சர் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

குறைவற்ற பிரியம்
எளிமையின் உறைவிடம்
மகிழ்ச்சியுடன் கூடிய புன்சிரிப்பு
ஊரும் உறவும் உங்கள் அன்பில்

என் மதிப்பிற்குரிய ஆரம்பப் பாடசாலை ஆசிரியையிடம் உணர்ந்து அனுபவித்தப் பிரியங்களினால் வடியும் அடியேனின் கல்விக் கண்ணீர் உங்களுக்காக அஞ்சலி செலுத்துகிறது.

# செப்ரெம்பரில் ஐ.பி.எல்.! ஆராய்கிறது பி.சி.சி.ஐ!!




*புதுடில்லி, மே 06*

*இடைநிறுத்தப்பட்ட ஐ.பி.எல். தொடரின் மீதமுள்ள போட்டிகளை செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவது தொடர்பில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) ஆராய்ந்து வருகின்றது.*

*உயிர் குமிழி பாதுகாப்பையும் மீறி ஐ.பி.எல். தொடரில் பங்கேற்ற வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து தொடர் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.*

*இடைநிறுத்தப்பட்ட, ஐ.பி.எல். தொடரில் 60 போட்டிகளில் 29 போட்டிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 31 போட்டிகளையும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவது குறித்து ஆராயப்படுகிறது.*

*இந்தக் காலப்பகுதிக்குள் இங்கிலாந்து - இந்தியா தொடர் முடிவடைந்து விடும். வெளிநாட்டு வீரர்கள் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு தயாராக இருப்பர். ஒக்ரோபரில் உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பமாவதால் செப்ரெம்பர் மாததில் இருக்கும் இடைவெளியை பயன்படுத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை பயன்படுத்த விரும்புகிறது. இதேவேளை, உயிர் காப்பு குமிழியில் கொரோனா பரவியது எப்படி என்பது குறித்து பி.சி.சி.ஐ. ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)*

# ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசை: திமுத் 11ஆவது இடத்தில்!



*டுபாய், மே 05*

*சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) டெஸ்ட் கிரிக்கெட்டின் துடுப்பாட்ட தரவரிசையில் இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரட்ண 11 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.*

*புதுமுக வீரரான பிரவீன் ஜெயவிக்ரம 380 புள்ளிகளுடன் பந்துவீச்சு தரவரிசையில் 48 ஆவது இடத்தை வகிக்கிறார்.*

*அண்மையில் நிறைவடைந்த பங்களாதேஷ் அணிக்கெதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3 இனிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய திமுத் கருணாரட்ண 428 ஓட்டங்களைப் பெற்றார். இத் தொடரில் டெஸ்ட் இனிங்ஸ் ஒன்றில் 244 ஓட்டங்களை அடித்து தனது முதல் இரட்டைச் சதத்தையும் பதிவு செய்தார்.*

*இதனால், டெஸ்ட் தரவரிசையில் 677 புள்ளிகளுடன் 15 ஆவது இடத்திலிருந்த திமுத் கருணாரட்ண 45 புள்ளிகளைப் மேலதிகமாகப் பெற்று 4 இடங்கள் முன்னேறி 11 ஆவது இடத்தைப் பிடித்தார்.*

*இவர் தவிர, மத்தியூஸ் 24ஆவது இடத்திலும், தனஞ்சய டி சில்வா 32ஆவது இடத்திலும், தினேஷ் சந்திமால் 50ஆவது இடத்திலும் உள்ளனர். மேலும், பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்டில் சிறப்பாக செயல்பட்ட திரிமன்னே 60ஆவது இடத்துக்கும், ஒஸத பெர்னாண்டோ 59ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.*

*இதேவேளை, அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே 11 விக்கெட்களை வீழ்த்திய பிரவீன் ஜெயவிக்கிரம 48 ஆவது இடம் கிடைத்துள்ளதுடன், மற்றுமொரு இளம் சுழற்பந்துவீச்சாளரான ரமேஷ் மெண்டிஸுக்கு 88 ஆவது இடம் கிடைத்துள்ளது. டெஸ்ட் பந்துவீச்சுத் தரவரிசையில் இலங்கை சார்பாக சிறந்த இடத்தில் (21 ஆவது) சுரங்க லக்மால் உள்ளார். (ஐ)*

# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ்: சிமோனா அதிர்ச்சி தோல்வி



*மட்ரிட், மே 06*

*ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடக்கும் ரென்னிஸ் போட்டியில் மூன்றாவது சுற்றில் சிமோனா ஹாலேப் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.*

*தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருக்கும் சிமோனா காலிறுதிக்கு முந்தைய சுற்றான - மூன்றாவது சுற்றில் சக நாட்டவரும், தரவரிசையில் 13-ஆம் இடத்தில் இருப்பவருமான எலிஸ் மொடன்ஸ எதிர்கொண்டார்.*

*விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டி 2 மணி நேரம், 34 நிமிடங்கள் நீடித்தது. இதில், மெர்டன்ஸ் 4-6, 7-5,*

*7-5 என்ற செற்களில் வெற்றி பெற்றார்.*

*இதையடுத்து காலிறுதிக்கு முன்னேறியுள்ள மெர்டன்ஸ், பெலாரஸின் அரைனா சபலென்காவை எதிர்கொள்ளவுள்ளார். (ஐ)*




# கொரோனாவிலிருந்து இந்தியா விடுபட யாழ். நாக விகாரையில் விசேட வழிபாடு

யாழ்ப்பாணம்,மே 06

**சர்வதேச இந்து - பௌத்த ஒற்றுமைக்கான அமைப் பின் ஏற்பாட்டில் இந்திய தேசம் கொடூர கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து மீண்டு புத்துணர்ச்சி பெற வேண்டி யாழ்ப்பாணம் சிறி நாகவிகாரையில் நேற்று ரத்ன சூத்திர பாரா யணமும், விசேட பூஜை வழிபாடும் இடம்பெற் றது.**

உலகத்துக்கு தர்மத்தையும், அன்பையும், அஹிம்சையையும் போதித்த பாரத தேசத்தில் தற் போது எழுந்துள்ள கொரோனா நெருக்கடியிலிருந்து மீட்சி பெறுவதற்காக இலங்கை அர சாங்கமும், நாட்டு மக்களின் சார்பாக நேற்று நாக விகாரை யின் விகாராதிபதி தலைமை யில் ரத்ன சூத்திர பாராயண மும், இந்து மத குருக்கள் தலை மையில் விசேட பூஜையும் இடம்பெற்றது.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைய 20 பேர் மட்டுமே இந்த வழிபாட்டில் கலந்து கொண்டனர். இதில் யாழ். இந் தியத் துணைத்தூதுவர் எஸ். பாலசந்திரன், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், இந்து - பௌத்த மத குருமார் கலந்து கொண்டனர். (எ-3)

## மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தல்

கொழும்பு,மே 06

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலால் நாட்டின் மேலும் சில பகுதிகள் தனிமைப் படுத்தப்பட்டன என இராணு வத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பமுனுவ கிராம சேவகர் பிரிவு, பிலியந்தல பொலிஸ் பிரி விற்குட்பட்ட ஹொன்னத்தர மற்றும் தெல்தர கிராம சேவகர் பிரிவுகள், எம்பிலிபிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லேகம, உடகம மற்றும் புதிய நகர் கிராம சேவகர் பிரிவு, கம்பஹா மாவட்டத்தின் குட்டிவில கிராம சேவகர் பிரிவு, இரத்தினபுரி மாவட் டத்தின் வலல்கொடை, சுது கல, ரத்கங்க மற்றும் மனமுர கிராம சேவகர் பிரிவுகள், வவுனியா மாவட்டத்தின் குருக்கள் புதுக்குளம் கிராம சேவகர் பிரிவு ஆகிய பகுதிகளே தனிமைப்படுத்தப்பட்டன. (எ)

## அம்புலன்ஸ் சேவைக்கு நாளாந்தம் 5,300 இற்கும் மேற்பட்ட அழைப்பு

கொழும்பு,மே 06

1990 என்ற சுவசெரிய அம்பு லன்ஸ் சேவைக்கு நாளாந்தம் 5,300 இற்கும் மேற்பட்ட அழைப்புக்கள் கிடைக்கப்பெறு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புக் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சு இதனைத் தெரிவித் துள்ளது.

நாள் ஒன்றுக்கு ஆயிரத்துக் கும் அதிகமான நோயாளர் களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் பணி களில் 'சுவசெரிய' அம்புலன்ஸ் சேவை ஈடுபட்டுள்ளது.

நாடு முழுவதும் 297 சுவ செரிய அம்புலன்ஸ் சேவைகள் இடம்பெறுகின்றன.

இதற்காக 1394 பணிக்குழா மினர் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

எனினும், புதிதாக 112 அம் புலன்ஸ் வண்டிகளுக்கான தேவைப்பாடுகள் நிலவுவதாக வும் அந்த அமைச்சு தெரிவித் துள்ளது. (எ)

## நிறுவனங்களை மூடினால் சேவை முடிவுறுத்தல் சட்டத்தின் கீழ் இழப்பீடுகளைப் பெற முடியும்

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு

கொழும்பு,மே 06

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தற்போதைய நிலை யில் நிறுவனம் ஒன்றை மூடுவ தற்கு நேரிடுமானால் சேவையை முடிவுறுத்தல் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

தொழில் அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இவ்வாறு குறிப்பிட் டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலால் தற்போது 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்கள் இழக் கப்பட்டுள்ளதாகவும், கொரோனா பரவல் காரணமாக பணிக்குத் திரும்ப முடியாமல் வீடுகளில் உள்ளவர்களுக்கு அவர்களது சம்பளத்தில் அரை வாசியை செலுத்துவதற்கு



இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய இவ்வாறான வர்களுக்கு சம்பளத்தில் பாதிய ளவு செலுத்தப்படுகின்றது.

பணிகளுக்குத் திரும்பியவர் களுக்கு முழுமையான சம்பளம் வழங்கப்படுவதாகவும் அமைச் சர் தெரிவித்தார். (எ)

## சீன தடுப்பூசிக்கான அனுமதி கிடைத்தவுடன் மக்களுக்கு ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்படும்

### சபையில் கூறினார் தயாசிறி

கொழும்பு,மே 06

இலங்கையில் 14 மில்லியன் மக்களுக்கு ஏற்று வதற்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் எந்தச் சிக்கலும் இல்லை எனவும், ரஷ்யாவிட மிருந்து 7.5 மில்லியன் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட் டுள்ளதாகவும், ஆறு இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இலங்கையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் சீன தடுப்பூசிக்கான அனுமதி கிடைத்தவுடன் அதனை மக்களுக்கு ஏற்றும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என கைத்தொழில் துறைகள், உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா தொற்று நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகளில் ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும், அரசாங்கமாக பரந்தளவிலான வேலைத்திட்டங்களை முன்னெ டுத்து நிலைமைகளை முறையாகக் கையாண்டுள் ளோம். இன்றும் உலகில் 50 நாடுகள் ஒரு தடுப்பூசியைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத அளவில் உள்ளன. ஆனால், நாம் இப்போது வரையில் 9 இலட்சத்துக்கும் அதிகமான தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்கியுள்ளோம். இந்தியாவின் தடுப்பூசிகள் ஆரம்பத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூலமாகவும் எமக்கு இலவசமாக தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. அதேபோன்று சீனாவின் சினோபார்ம் தடுப்பூசி களும் நாட்டில் பாதுகாத்து வைக் கப்பட்டுள்ளன. ஆறு இலட்சம் தடுப்பூசி கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் அவற்றில் மூவாயிரம் தடுப்பூசி



கள் சீனவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன. எஞ்சிய தடுப்பூசிகளும் கைவசம் உள்ளன.

அந்த தடுப்பூசிகளைப் பயன்படுத்த முடியும் என்ற அனுமதி கிடைத்தவுடன் அவற்றை நாம் பயன்படுத்த முடியும். ரஷ்யாவின் ஸ்புட்னிக்-5 தடுப்பூசிகள் கிடைத்தன. அடுத்த வாரமும், மே இறுதியிலும், ஜூன், ஒக்டோபர் மாதங்களில் ஏனைய தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டு வரும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள் ளன. 7 அல்லது 7.5 மில்லியன் ஸ்புட்னிக்- -5 தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவே தீர்மானிக்கப் பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இந்தியாவின் திடீர் நிலைமைகள் காரணத்தால் எம்மால் ஒக்ஸ் போர்ட் அஸ்ராசெனேகா தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. தற்போதுள்ள நிலையில் இலங்கையில் 14 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்ற வேண்டிய தேவையுள்ளன. அதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எமக்கு சர்வ தேச நாடுகளில் ஒத்துழைப்பு கிடைத்து வருகின்ற காரணத்தால் எம்மால் நிலைமைகளை சமாளிக்க முடியும்- என்றார். (எ)

## "வெள்ளிதோறும் ரஷ்யாவிலிருந்து தடுப்பூசிகள் இலங்கைக்கு வரும்"

கொழும்பு,மே 06

கொரோனா தடுப்பூசிக ளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு எவ்வித பொருளாதார சிக்கலும் இல்லை. ரஷ்யாவிடமிருந்து 13.5 ஸ்புட்னிக்-5 தடுப்பூசி களைப் பெற்றுக்கொள்வதற்கு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந் தத்துக்கு அமைய வாராந்தம் ஒரு இலட்சம் என்ற அடிப் படையில் கட்டம் கட்டமாக அவற்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என அரசாங்கம் தெரிவித் துள்ளது.

இதேவேளை முதற்கட்ட மாக ஒரு தடுப்பூசியைப் பெற் றுக்கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்டமாக பிறி தொரு தடுப்பூசியை வழங்க முடியுமா? என்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் ஆய்வுகளை முன்னெடுத்துள் ளது.

எனவே, உலக சுகாதார ஸ்தாபனத்தால் உத்தியோக பூர்வமாக இதுதொடர்பில் அறிவிக்கப்படும் வரை மாற்று தடுப்பூசிகள் வழங்கப்படமாட் டாது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங் களை அறிவிக்கும் ஊடகவிய லாளர் சந்திப்பில் அமைச் சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரி வித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ரஷ்யாவிடமிருந்து 13.5 மில்லியன் ஸ்புட்னிக் -வி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் கைசாத் திடப்பட்டுள்ளது. அதில் முதற்கட்டமாக 15 ஆயிரம் தடுப்பூசிகள் நாட்டை வந்த டைந்துள்ளன. அத்தோடு ஒவ் வொரு வெள்ளியன்றும் ஒரு இலட்சம் என்ற அடிப்படை யில் எஞ்சிய தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானித் துள்ளோம்.

மேலும் தடுப்பூசிகளின் ஆயுட்காலம் 6 மாதங்கள் மாத்திரமேயாகும். எனவே அதற்கேற்பவே தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய முடியும். எனவே ஜூலை, ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பரில் வழங்கப்படக் கூடியவாறு திட்டமிட்டு அடுத்தகட்ட தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளப்படும். - என்றார். (எ)

ஈழநாடு
Eelanadu

96 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கம்

# மாகாணங்கள் இடையே பயணக்கட்டுப்பாடு வரும்

சுகாதார சேவைகள் பணிப்பாளர்

கொழும்பு, மே 06

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக தற்போது 14 மாவட்டங்களில் முடக்க நிலை நடைமுறையில் உள்ளது. எனவே தொற்று அதிகமானால் மாகாணங்களுக்கு இடையே பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கையில் மிகக் கூடியளவில் அதிகரிப்பு ஏற்படுமாயின் மாகாணங்களுக்கு இடையில் பயணக்கட்டுப்பாட்டை விதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுவரையில் நாட்டின் 14 மாவட்டங்களில் 6 பொலிஸ் பிரிவுகளும், 98 கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரிஷாத்தின் பாதுகாப்பு பிரிவினரும் கொரோனா தொற்றுக்கு இலக்கு!

பாராளுமன்றில் பங்கேற்கும் வாய்ப்பு மறுப்பு

கொழும்பு, மே 05

குற்றப்புலனாய்வு பிரிவில் ஒரு சிலருக்கும், ரிஷாத் பதியுதீன் எம்.பி.யின் பாதுகாப்பு அதிகாரிகள் சிலருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், ரிஷாத் பதியுதீன் எம்.பியை பாராளுமன்ற அமர்வுகளுக்கு அனுமதிக்க முடியாதுள்ளது என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் சபாநாயகருக்கு அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டுவரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தால் அவரை பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் ஆலோசனைக்கு அமைய பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணாந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

எனினும், ரிஷாத் பதியுதீன் சபைக்கு அழைத்து வரப்படவில்லை. இது தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் நேற்று கேள்வி எழுப்பியிருந்தார். அது தொடர்பில் ஆராய்வதாக சபாநாயகர் கூறினார்.

இந்நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவில் சிலருக்கும், ரிஷாத் பதியுதீன் எம்.பி.யின் பாதுகாவல் அதிகாரிகள் சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள காரணத்தால் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை நாடாளுமன்ற அமர்வுகளுக்கு அனுமதிக்க முடியாதுள்ளது எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சபாநாயகருக்கு அறிவித்துள்ளனர் என்று சபாநாயகர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேர்தல் சட்ட சீர்திருத்தம் பாராளுமன்ற குழுவின் தலைவராக தினேஷ்

கொழும்பு, மே 06

தேர்தல் சட்டங்கள், தேர்தல் முறைமை குறித்த சீர்திருத்தங்களை அடையாளங் காண்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவின் தலைவராக சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கு சபை முதல்வரும், வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தலைமையில் விசேட பாராளுமன்றக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் உறுப்பினர்களாக அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பவித்ரா வன்னியாராச்சி , டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ஸ, எம். யூ. எம். அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார, கபீர் ஹஷீம், ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார, மனோகணேசன், எம்.ஏ. சுமந்திரன், மதுர விதானகே, சாகரகாரியவசம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2021 A/L 2nd Shy
CHEMISTRY (1st Shy also)

ZOOM CLASS

க.சிவத்திரன் B.Sc (Hons)

விரைவான மீட்டலுடன் Past Paper class

Part I 1979 -2020, Part II 2011 - 2020

Physical I, II : Mon,Tue, Wed, Thur } Daily
Organic II : Fri, sat, sun } 5.30am - 7.00am

| | | |
|---|---|---|
| Inorganic I,II | : Sat, Sun | 7.30 am – 9.30am |
| Calculations I, II | : Sat | 10:00 am – 12.00 noon |
| Gases, Energetics I, II | : Sun | 10.00am-12.00 noon |

இவற்றில் முதலில் முடிவடையும் பகுதிகளில் இருந்து
Organic I உம் Industrial & Environmental உம் நடைபெறும்.
2022 மாணவர்களும் விரும்பிய அலகுகளை கற்கலாம். இலங்கையில் எங்கிருந்தும் பங்குபற்றலாம் நேரடி வகுப்புகள் ஆரம்பிக்கப்படினும் இறுதிப்பரீட்சை வரை ZOOM இலேயே இதே நேரப்படி நடைபெறும்.
Model exam & Discussion உம் உண்டு.

Theory வகுப்புகள் (ஆரம்பத்திலிருந்து)

Physical ⇨ Sat, sun 12.45pm - 3.45pm
organic ⇨ Mon, Wed, Thur, Sat - 7.30pm -9.00pm
Inorganic ⇨ Mon,Tue, Wed,Thur ⇨ 12.30 pm - 2.00 pm

2022 மாணவர்களும் விரும்பிய அலகுகளில் பங்குபற்றலாம்.
அனைத்தும் 08/05/2021 இலிருந்து ஆரம்பம்
NORMAL CALL 077 008 6416

# மரண அறிவித்தல்

தோற்றம்
01
-
08
-
1960



உதிர்வு
03
-
05
-
2021

## திருமதி புஸ்பராஜ் தவமணிதேவி

யாழ். சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், சித்தங்கேணி, சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராஜ் தவமணிதேவி அவர்கள் 03-05-2021 திங்கட் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா – இராசம்மா தம்ப திகளின் அன்புப் புதல்வியும், பூதர் புஸ்பராஜ் அவர்களின் அன்பு மனை வியும், செல்லம் அவர்களின் அன்புச் சகோதரியும், கொன்சன் அவர்க ளின் அன்பு மைத்துனியும், கஷாகரன், சுகன்யா, றதீப், றம்மியா ஆகி யோரின் பாசமிகு தாயாரும், ஜெயராட், லோஜினி, பரணியா, திலிபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும். ஜனாஸ், கஜீஷா, சக்சிகா, சமந்தா, கஜீஸ், லீவியா, ஆதிவிக், சாத்விக் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

**நிகழ்வுகள்**

**பார்வைக்கு** Get Direction
Monday, 03 May 2021 8:30 AM - 4:30 PM
Friedhof AbdankungshalleEmil-Schiblistrasse 1, 2543 Lengnau, Switzerland

**பார்வைக்கு** Get Direction
Tuesday, 04 May 2021 8:30 AM - 4:30 PM
Friedhof AbdankungshalleEmil-Schiblistrasse 1, 2543 Lengnau, Switzerland

**பார்வைக்கு** Get Direction
Wednesday, 05 May 2021 8:30 AM - 4:30 PM
Friedhof AbdankungshalleEmil-Schiblistrasse 1, 2543 Lengnau, Switzerland

**தகனம்** Get Direction
Thursday, 06 May 2021 10:00 AM - 1:00 PM
Friedhof AbdankungshalleEmil-Schiblistrasse 1, 2543 Lengnau, Switzerland

**தொடர்புகளுக்கு:**
விஜே - மகன் : +41788357687
அஜித் - மகன் : +41765172213
ஜெறாட் - மருமகன் : +41795108453
திலீபன் - மருமகன் : +41763430801

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஆதலால் காதல் செய்வோம், கான்டில் திரைப்படத்திலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - திரை விமர்சனம்- நெஞ்சம் மறப்பதில்லை




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : பல்துறைக் கருவூலம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- இசைக்குழுக்களுக்கான போட்டி நிகழ்ச்சி



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்